# உதயன்

விலை ரூபா 6-00

சுடர்: 14 வள்ளுவர் ஆண்டு 2030 ஆடி 31 திங்கட்கிழமை [16-08-1999] UTHAYAN A Lively National Tamil Daily கதிர்: 225


## மலையகத்தில் பாதுகாப்புத் தீவிரம்

கொழும்பு, ஒக. 16

மலையகப் பகுதிகளில் விடுதலைப் புலிகள் ஊடுருவியுள்ளார்கள் எனக் கிடைத்த தகவல்களை அடுத்து மலையகத்தின் பல்வேறு பகுதிகளிலும் பாதுகாப்பு நடவடிக்கைகள் அதிகரிக்கப்பட்டுள்ளன.

மலையகத்தின் முக்கிய நகரங்களில் பொலீஸாரும் இராணுவத்தினரும் தேடுதல் நடவடிக்கைகளைத் தீவிரப்படுத்தியுள்ளனர்.

வீதிகளுக்குக் குறுக்கே வீதித்தடைகள் போடப்பட்டுச் சகல வாகனங்களும் மோப்ப நாய்கள் கொண்டு சோதனையிடப்படுகின்றன.

ஹட்டன், பதுளை ஆகிய பகுதிகளில் கடந்த சில தினங்களுக்கு முன்பு இடம்பெற்ற குண்டு வெடிப்புகள் மற்றும் மின்மாற்றித் தகர்ப்புச் சம்பவங்களை அடுத்தே தேடுதலும் கைதுகளும் அதிகரிக்கப்பட்டுள்ளன என்றும்—

மேற்படி சம்பவம் தொடர்பாக சந்தேகத்தின் பேரில் தமிழ் இளைஞர்கள் பலர் கைது செய்யப்பட்டுத் தீவிர விசார்ணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர் என்றும் — தெரிவிக்கப்பட்டுள்ளது.

(10.ஆம் பக்கம் பார்க்க)

## 6 இலங்கைத் தமிழர் உட்பட 12 பேர் மன்னார் கடலில் கைது

கொழும்பு, ஒக. 16

தலைமன்னார் கடற்பரப்பில் வைத்து ஆறு இந்திய மீனவர்களும் ஆறு இலங்கைத் தமிழர்களும் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று இலங்கைக் கடற்படை அறிவித்துள்ளது.

மன்னாரில் இருந்து தமிழகம் நோக்கிச் சென்றுகொண்டிருந்த இரு படகுகளை மறித்துச் சோதனை செய்த சமயம் இவர்கள் கைது செய்யப்பட்டனர் என்று பொலீஸார் தெவித்தனர்.

கைதான இலங்கைத் தமிழர்களில் இரண்டு பெண்களும், கைக்குழந்தை ஒன்றும் அடங்கும் என்று கடற்படையினர் கூறினர்.

இவர்கள் மன்னார் பொலீஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளனர். (இ-3-7)

# புலிகளின் பகுதியைநோக்கி கிழக்கில் படை நடவடிக்கை!

## கடும் ஷெல் வீச்சால் மட்டுநகர் அதிர்ந்தது

மட்டக்களப்பு, ஒகஸ்ட் 16

மட்டக்களப்பு மாவட்டத்தில் வவுணதீவு முகாமில் இருந்து நேற்று முன்தினம் இரவு 8 மணியளவில் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள படுவான்கரை நோக்கி மேற்கொள்ளப்பட்ட படை நகர்வு இடைவழியில் கைவிடப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

படை நகர்வுக்காக நகரில் இருந்து அந்தப் பகுதிகளை நோக்கி ஏவப்பட்ட ஷெல்களால் நகரம் அதிர்ந்தது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் நகருக்கு வெளியே பெரிய நிலப்பரப்பில் நிலைகொண்டுள்ள விடுதலைப் புலிகள், படையினருக்கு எதிரான தாக்குதல்களைத் தீவிரப்படுத்தி வருவதை அடுத்து இந்த படை நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

தற்கொலைத் தாக்குதல், கிளைமோர் தாக்குதல் என விடுதலைப் புலிகள் நகரில் தொடரும் தாக்குதல்களை முறியடிக்கும் விதத்தில் படையினர் புலிகளின் பிரதேசம் நோக்கிஇந்த நடவடிக்கையை ஆரம்பித்தனர்.

வவுணதீவுமுகாமில் இருந்து டாங்கிகள், கவசவாகனங்கள் சகிதம் படையினர் படைநகர்வை மேற்கொண்டு

(10ஆம் பக்கம் பார்க்க)

## கொட்டடியில் விபத்து

யாழ்ப்பாணம், ஒக. 16

கொட்டடிப் பகுதியில் நேற்றும் பிற்பகல் 1. 30 மணியளவில் இடம்பெற்ற விபத்து ஒன்றில் சைக்கிளில் சென்றுகொண்டிருந்த இருவர் காயமடைந்து யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

வட்டுக்கோட்டை தெற்கைத் சேர்ந்த நவரட்ணம்

(10 ஆம் பககம் பார்க்க)

## 3மாணவரை காணோம்!

யாழ்ப்பாண்ம், ஒக. 16

ஆனைக்கோட்டை, மானிப்பாய்ப் பகுதிகளைச் சேர்ந்த மூன்று மாணவர்கள் கடந்த வெள்ளிக்கிழமை தொடக்கம் காணாமல் போயுள்ளனர் என்று அவர்களின் உறவினர்களினால் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். அலுவலகத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

ஆறுகால்மடம், ஆனைக்கோட்டையைச் சேர்ந்தவர்களான ஜெயராசா சணா (வயது 15), தவஞானம் ரமணன் (வயது 13), நவாலி தெற்கு, மானிப்பாயைச் சேர்ந்த மகாலிங்கம் துஷ்யந்தன் (வயது 15) ஆகியோரே காணாமற் போனவர்கள் ஆவர்.

மகாலிங்கம் துஷ்யந்தன் என்ற மாணவன் ஆனைக்

(10 ஆம் பக்கம் பார்க்க)

## புலிகள் - புளொட் மோதல்

மட்டக்களப்பு, ஒக. 16

மட்டக்களப்பு செங்கலடி—பதுளை வீதியில் கொடுவாமடுவில் நேற்று நண்பகல் விடுதலைப் புலிகளுக்கும், புளொட் அமைப்புக்கும் இடையில் மோதல் ஒன்று இடம்பெற்றது.

இந்த மோதலில் சிக்கி பரமசிவம் சிவலோகன்(24 வயது) என்ற பொதுமகன் உயிரிழந்தார்.

12 வயதுச் சிறுவன் உட்பட இரு பொதுமக்கள் காயமடைந்து மட்டக்களப்பு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

இந்த மோதலில் புளொட் அமைப்புக்கோ, விடுதலைப் புலிகளுக்கோ சேதம் எதுவும் ஏற்படவில்லை என்று தெரிவிக்கப்பட்டது. (இ-3-21)

## வேலை நிறுத்தங்களின் பின்னணியில் சதிமுயற்சி?

### ஆராய குழு நியமனம்

கொழும்பு, ஒக. 16

அரச மற்றும் கூட்டுத்தாபனங்களில் திடீர் திடீரென இடம்பெறும் வேலை நிறுத்தங்களுக்கான காரணத்தைக் கண்டறிய ஜனாதிபதி விசேட குழு ஒன்றை அமைக்கவிருக்கின்றார்.

அரசாங்கத்தைக் கவிழ்ப்பதற்காக சதி நடவடிக்கைகளாக இந்த வேலை நிறுத்தங்கள் இடம்பெறுகின்றனவா? இந்த வேலை நிறுத்தங்களின் பின்னணி என்ன? உண்மையில் அவர்களுக்கு பிரச்சினைகள் உண்டா? என்பன தொடர்பாக இந்தக் குழு ஆராயும் எனத் தெரிவிக்கப்பட்டது.

அமைச்சரவையில் இந்த விடயம் விரிவாக ஆராயப்படவிருப்பதாக தெரிவிக்கப்பட்டது. (இ-3)

## வேலிகளை அகற்றுமாறு படையினர் அறிவுறுத்து

மட்டக்களப்பு, ஒக.16

மட்டக்களப்பில் இருந்து பொலன்னறுவைக்கு படையினரின் வாகனஅணி செல்லும் பாதைகளில் உள்ள வேலிகளில் உள்ள தகரங்கள் மற்றும் கிடுகுகளை அகற்றுமாறு பொதுமக்களுக்கு படையினர் அறிவுறுத்தல் விடுத்துள்ளனர்.

வீதியில் உள்ள வீடுகளின் மதில்கள் நான்கு அடிக்கு மேற்படாமல் இருக்கத்தக்க

(10 ஆம் பக்கம் பார்க்க)

## கைதான பெண் காங்கேசனுக்கு

யாழ்பாணம், ஒக. 16

சாவகச்சேரியில் கடந்த 11 ஆம் திகதி கைது செய்யப்பட்ட திருமதி கலாநிதி குலசேகரம் என்ற குடும்பப்பெண் போதைப் பொருள் வைத்திருந்தமைக்காக காங்கேசன்துறை பயங்கரவாதத் தடுப்புப் பிரிவிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார் என்று சாவகச்சேரி படைவட்டாரங்கள் தெரிவித்தன.

இது தொடர்பாக மனித உரிமைகள்ஆணைக்குழுயாழ். அலுவலகத்துக்கும் அறிவிக்

(10 ஆம் பக்கம் பார்க்க)

# யுத்தத்தை இனியும் தாங்க முடியாது பேச்சு நடத்துவதற்கு முன்வாருங்கள்

## மடுத்தேவாலயத்தில் ஆயர் மல்கம் ரஞ்சித் அழைப்பு

மன்னார், ஒக. 16

"யுத்தத்தால் அதிகமாகப் பாதிக்கப்பட்டுவிட்டோம். இனியும் இந்தப் பாதிப்பை தாங்க முடியாது. உடனடியாகப்பேச்சுக்களைஆரம்பிக்க சகலரும் முன்வாருங்கள்.

இப்படி அழைப்பு விடுத்தார் ஆயர் மன்றச் செயலாளரும், இரத்தினபுரி ஆயருமான அதிவண. மல்கம் ரஞ்சித்.

மடுத்தேவாலயத்தில் நேற்று திருப்பலி ஒப்புக்கொடுத்து உரையாற்றுகையில் அவர் இந்த அழைப்பை விடுத்தார்.

மன்னார் குரு முதல்வர் அருட்திரு. ஏ. சேவியர் குரூஸ், அருட்தந்தை டி. பி. தேவராஜா ஆகியோருடன் இணைந்து ஆயர் மல்கம் ரஞ்சித் திருப்பலி ஒப்புக்கொடுத்தார்.

அங்கு அவர் பேசுகையில் கூறியதாவது:

இலங்கையின் தற்போதைய பிரச்சினைக்குத் தீர்வு காண்பது கடினமான ஒன்றாகத் தோன்றுகின்றது. நாம் எல்லோரும் நமது மதங்களைப் பெரிதாகக் கூறுகிறோம். இந்த நாட்டை தர்மதுவீபம் என்கிறோம். ஆனால் அதன் பொருள் என்ன என்பதை

(10 ஆம் பக்கம் பாரீக்க)

## சனி, ஞாயிறு போக்குவரத்து இல்லை

இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதியில் இருந்து இராணுவக் கட்டுப்பாடற்ற வன்னிப்பகுதிக்கு சனி, ஞாயிறு மற்றும் பொது விடுமுறை நாள்களில் பயணிகள் போக்குவரத்தோ அல்லது லொறிப் போக்குவரத்தோ இடம்பெறுவதற்கு அனுமதி வழங்கப்பட

[10 ஆம் பக்கம் பார்க்க]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

## தவறிவிட்டன

539, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த

த. சொர்ணகாந்தி, த. ஜெயந்தி

ஆகியோரின் விமான ரிக்கற்றுகள் 15-08-99 அன்று கலட்டி அம்மன் கோயிலுக்கும் தட்டாதெருச் சந்திக்கும் இடையில் காலை 7-00 மணியளவில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் மேற்காணும் முகவரியில் ஒப்படைத்துதவவும். சன்மானம் வழங்கப்படும்.

(68231)

# மரண அறிவித்தல்கள்

## கந்தையா இராஜரட்ணம்

ஏழாலையைப் பிறப்பிடமாகவும் கோண்டாவில் கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட முன்னாள் காலி பத்மா ஸ்ரோர்ஸ் உரிமையாளருமான கந்தையா இராஜரட்ணம் தெகிவளையில் 14-08-99 இல் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற தர்மேஸ்வரியின் அன்புக் கணவரும் சிவகரன், கௌசிகா, துசியா, மயூகரன் ஆகியோரின் அன்புத் தந்தையும் பாலமுகுந்தனின் பாசமிகு மாமனாரும் காலஞ்சென்ற கந்தையா அன்னப்பிள்ளை ஆகியோரின் மகனும் இராமசாமி இரத்தின மலர் ஆகியோரின் மருமகனும், சிவலிங்கம், பாலசுப்பிரமணியம், திருமதிகள் சுப்பிரமணியம் இராசம்மா, ஸ்ரீஸ்கந்தராசா பூமணி ஆகியோரின் சகோதரனும் திருமதிகள் சரஸ்வதி பொன்னுத்துரை, சாரதாதேவி நவரத்தினம், சாந்தவதனா சதாசிவம், வசந்தி விக்னேஸ்வரன், பஞ்சலிங்கம் ஆகியோரின் மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் கொழும்பில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:

இ. துசியா (கொழும்பு)

கோண்டாவில் கிழக்கு,
கோண்டாவில்.

(தொலைபேசி. இல- 01- 715771))

(68233)

## க. சு. வேலாயுதபிள்ளை

(பிரபல சுருட்டு, புகையிலை வர்த்தகர்)

தாவடி தெற்கைச்சேர்ந்த க. சு. வேலாயுதபிள்ளை காலமானார்.

இவர் காலஞ் சென்ற பன்னாலை சுப்பிரமணியம் செல்லம்மா தம்பதிகளின் சிரேஷ்ட புதல்வரும், தங்கமணியின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற சிறீஸ்கந்தா, ஞானஸ்கந்தராஜா, ஞானஸ்கந்தா, சிறிராணி, தங்கராணி, சிவாஸ்கந்தா, ஸ்கந்ததாசன், குமாரதாசன் ஆகியோரின் அன்புத் தந்தையும் சிவஞானசோதி, விக்கினேஸ்வரி, ராஜேஸ்வரன், ரட்ணலிங்கம், சாந்தி, சுஜாத்தா ஆகியோரின் மாமனாரும், காலஞ்சென்ற பாலமுருகன், சிறீ வெங்கடேசன், திருமகள், சிறீரங்கநாயகி, கலையரசி, ரஞ்ஜனி, பிரசாந், அகல்யா, சசி, சரண்யா, சுகன்யா, விஸ்னுகா, கீர்த்தனா ஆகியோரின் அன்புப் பேரனும், பாக்கியம், நாகரத்தினம் காலஞ்சென்ற தணிகாசலம் ஆகியோரின்சகோதரரும், தர்மலிங்கம், செல்வநாயகம் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (15-8-99) ஞாயிற்றுக்கிழமை மாலை தாவடி இந்து மயானத்தில் நடைபெற்றன.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

தகவல்:

சு. வே. ஞானஸ்கந்தா

தாவடி தெற்கு,
கொக்குவில்.

(68230)

## திருமதி வள்ளியம்மை பரஞ்சோதி

(கமலம் அக்கா)

நல்லூர் கைலாசபிள்ளையார்கோயிலடியைப் பிறப்பிடமாகவும் தற்போது லண்டனில் வசித்தவருமாகிய திருமதி வள்ளியம்மை பரஞ்சோதி (கமலம் அக்கா) அவர்கள் ஆஸ்திரேலியாவில் 14-08-99 இல் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தையா பரஞ்சோதியின் அன்பு மனைவியும் Dr. இந்திராணி (லண்டன்), Dr. மனோன்மணி (லண்டன்), Dr. யோகேஸ்வரி (ஆஸ்திரேலியா), Dr. விஜயலட்சுமி (லணடன்) ஆகியோரின் பாசமிகு தாயாரும் பத்மநாதன் (பொறியியலாளர்—லண்டன்), Dr. சந்திரசேகரம் (லண்டன்), Dr. பரஞ்சோதி (ஆஸ்திரேலியா), மனோகரன் (கணக்காளர்—லண்டன்) ஆகியோரின் அன்பு மாமியாரும் செகா, கிருபாலினி, நிஷாந்தன், சுதர்ஷன், றமேஸ், கலைச்செல்வி, கலைப்பிரியா ஆகியோரின் அருமைப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 19-8-99 வியாழக்கிழமை ஆஸ்திரேலியாவில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:

சி. வைகுந்தவாசன்
(சிறீ—பெறாமகன்)

இல. 9, கைலாசபிள்ளையார்கோயில் மேற்கு வீதி,
நல்லூர்.

([illegible])

## சமய சந்நிதிகளில்

அளவெட்டி நாகேஸ்வரம் ஸ்ரீ நாகவரத நாராயணர் ஆலய மஹோற்சவம் எதிர்வரும் 24 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 11.30 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து அடுத்த மாதம் 4 ஆம் திகதி வரை நடைபெறும்.

அடுத்த மாதம் 2 ஆம் திகதி காலை 11 மணிக்கு தேர் உற்சவமும் அன்று பிற்பகல் 5.15 மணிக்கு உறியடி விழாவும் மறுநாள் காலை 8 மணிக்கு ஸ்ரீரங்கன் பாத பூசையும் தொடர்ந்து தீர்த்தோற்சவமும் இடம்பெறும்.

உற்சவ காலங்களில் மாலை 6 மணிக்கு விசேட கூட்டுப் பிரார்த்தனையும் சொற்பொழிவும் இடம்பெறவுள்ளன. (ஐ-க-28-30)

★ ★ ★

இயக்கச்சி மல்வில் கிருஷ்ணன் கோயில் வருடாந்த உற்சவம் இன்று ஆரம்பமாகி தொடர்ந்து பன்னிரு தினங்கள் நடைபெறும்

எதிர்வரும் 27 ஆம் திகதி வெள்ளிக்கிழமை தீர்த்தோற்சவத்துடன் உற்சவம் நிறைவு பெறும். (இ-117)

★ ★ ★

கொக்குவில் மஞ்சவனப்பதி முருகன் ஆலய வருடாந்த மஹோற்சவம் நாளை செவ்வாய்க்கிழமை நண்பகல் 12 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

மஹோற்சவக் கிரியைகளை சிவஸ்ரீ இரங்க வரதராஜக்குருக்கள் நெறிப்படுத்துவார்.

தேர்த்திருவிழா எதிர்வரும் 5 ஆம் திகதி புதன்கிழமையும் மறுநாள் தீர்த்தத்திருவிழாவும் இடம்பெறும். (ஐ-ரி)


**புலமைப் பரிசில்
2000**

வகுப்புகளுக்கு
மாணவர்களை
சேர்ப்பதற்கான

**அனுமதிப் பரீட்சை**
17-08 99 பி. ப. 3 மணி
பிரிவு I

ஆரம்பம்: 19-08-99

**BOND**
யாழ் நகர்.

(68224)

**நாகம்ஸ்**
சுன்னாகம்

கார்த்திக், நக்மா,
கவுண்டமணி நடித்த

**மேட்டுக்குடி**

காட்சிகள் 11.00, 2.30
[புதிய நேரம்]
[68220]

**லிபேட்டி தியேட்டர்**
அச்சுவேலி.
இன்று
சத்தியராஜ் - குஷ்பு
நடித்த

**மலபார் பொலீஸ்**
(புதிய வெளியீடு)
காட்சிகள்: 10-30, 2-30
(68097)

**ராஜா**
யாழ்ப்பாணம்

பிரசாந்த் — ஐஸ்வர்யா
நாசர் நடித்த

**ஜீன்ஸ்**

10-30, 2-30
(புதிய நேரம்)
([illegible])


## கண்ணீர் அஞ்சலி

எமது கழக உறுப்பினர்

**லயன் வே. ஞானஸ்கந்தா**

அவர்களின்

அன்புத் தந்தையார்

**அமரர் சுப்பிரமணியம் வேலாயுதபிள்ளை**

அவர்கள்

14-08-99 அன்று மறைந்த செய்தி கேட்டு மிகுந்த துயர் அடைகின்றோம். அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத்தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

லயன்ஸ் கழகம்
கொக்குவில்.

(68234)

நாவற்குழி

## அருள்மிகு சித்திவிநாயகர் ஆலயம் பிரமாதி வருட மஹோற்சவ விஞ்ஞாபனம்

நாவற்குழி அருள்மிகு சித்திவிநாயகர் ஆலய வருடாந்த மஹோற்சவம்
17-08-1999 செவ்வாய்க்கிழமை காலை மணி 11.30க்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 10 தினங்கள் உற்சவம் நடைபெறும்.

விசேட உற்சவங்கள் வருமாறு:

17-08-99 செவ்வாய்க்கிழமை கொடியேற்றம் காலை 11.30 மணி

25-08-99 புதன்கிழமை இரதோற்சவம் காலை 10.00 மணி

26-08-99 வியாழக்கிழமை தீர்த்தோற்சவம் காலை 11.30 மணி

அடியார்கள் உற்சவ தினங்களில் கோயிலுக்கு வருகை தந்து விநாயகரின் அருளைப் பெற்றுய்யும் வண்ணம் கேட்டுக் கொள்கிறோம்.

விநாயகரின் அருள்வேண்டி விழா சிறப்புற வாழ்த்துவோர்:

சுவிஸ்சோ கோல்ட் கட்டிங் சென்ரர்
யாழ். வீதி, சிறாம்பியடி,
யாழ்ப்பாணம்.

பட்டாபி படமாடம்
இல. 64, மணிக்கூட்டு வீதி,
யாழ்ப்பாணம்.

சிவன் நகைத் தொழிலகம் S.R.S. பில்டிங்
65, சிவன் கோயிலடி வடக்கு வீதி,
யாழ்ப்பாணம். (சி/8526)

# மரண அறிவித்தல்

## நன்னியர் முருகர் அழகரட்ணம்

அளவெட்டியைப் பிறப்பிடமாகவும் ஆனைக்கோட்டையை வசிப்பிடமாகவும் கொண்ட நன்னியர் முருகர் அழகரட்ணம் காலமானார்.

அன்னார் நன்னியர் முருகர் — காலஞ்சென்ற ஆச்சிப்பிள்ளை ஆகியோரின் சிரேஷ்ட புத்திரனும் காலஞ்சென்றவர்களான சின்னப்பொடி கந்தையா— சரஸ்வதி ஆகியோரின் மருமகனும் புஸ்பராணியின் அன்புக் கணவரும் பிரதீபன் (கனடா), பார்த்தீபன் ஆகியோரின் தந்தையும் அப்புத்துரை, நாகம்மா, குணரட்ணம் (பிரான்ஸ்), பாலசுப்பிரமணியம், இந்திராணி, செல்வரட்ணம் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரனும் கமலாதேவி (கனடா), பரமேஸ்வரி (பிரான்ஸ்), ரவீந்திரன், சகுந்தலா, சுசீலாமணி (ஆசிரியை, உயரப்புலம் மெ. மி. வித்தியாலயம் ஆனைக்கோட்டை), ருக்மணி, காலஞ்சென்ற குருசாமி, சிவக்கொழுந்து (பிரான்ஸ்), குணரட்ணம் (பொது முகாமையாளர், ப. தெ. வ. கூ. சங்கம்). பாலேஸ்வரி (பிரான்ஸ்) ஆகியோரின் மைத்துனரும் குணரட்ணம் (கனடா), எட்வேட் லூயிஸ் (பிரான்ஸ்), தயாளாதேவி, அன்ரனி, பஞ்சலோகறஞ்சன் (கிராம அலுவலர்) ஆகியோரின் சகலனும், தம்பித்துரை, மரியம்மா, இராசகுமார், யோகம்மா ஆகியோரின் மருமகனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் அவரது இல்லத்தில் 16-8-99 இன்று காலை 10.30 மணியளவில் நடைபெற்று தகனக் கிரியைகள் கரையான்திட்டி மயானத்தில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக் கொள்கிறோம்.

தகவல்:

த. அ. தம்பித்துரை

82, மானிப்பாய் வீதி,
ஆனைக்கோட்டை.

(68232)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாகிஸ்தானின் திடீர் தாக்குதல்களை எதிர்கொள்ள ஆயத்தமாக இருங்கள்

## இந்திய மக்களுக்கு ஜனாதிபதி எச்சரிக்கை



புதுடில்லி, ஒக. 16

கடந்த காலத்தில் சில தடவைகள் இந்தியா நம்பிக்கைத் துரோகத்துக்கு ஆளாகி இருக்கிறது. எனவே நாட்டு மக்களே விழிப்புடன் இருங்கள் பாகிஸ்தான் திடீர்த் தாக்குதல்களை எந்நேரமும் நடத்தலாம் எதற்கும் தயாராக இருப்பதே விவேகமான செயலாகும்.

இந்திய ஜனாதிபதி கே. ஆர். நாராயணன் நாட்டின் சுதந்திர தினத்தை ஒட்டி ஆற்றிய உரையில் மக்களை இவ்வாறு எச்சரித்திருக்கிறார்.

53 ஆவது சுதந்திரதினத்தை ஒட்டி அவர் ஆற்றிய உரையின் சுருக்கம் வருமாறு:-

நாட்டு மக்கள் ஒற்றுமையுடனும் ஐக்கியத்துடனும் ஒன்றுபட்டு நிற்பதன் மூலமே பாகிஸ்தானின் நோக்கங்களை தகர்க்க முடியும். எதிர்காலத்தில் மேலும் பல கார்கில்களைப் பாகிஸ்தான் உருவாக்கக் கூடும். இவ்வாறான போர் நிலைமைகளை எதிர்கொள்ள பாதுகாப்புச் செலவீனத்தை அதிகரிக்க வேண்டும் — என்று நாராயணன் தனது உரையில் தெரிவித்தார்.

### பிரதமரின் உரை

சுதந்திரதினத்தை யொட்டி நேற்று டில்லி செங்கோட்டையில் தேசியக் கொடியை ஏற்றி வைத்தபின் பிரதமர் வாஜ்பாய் நாட்டு மக்களுக்கு உரையாற்றினார்.

நேற்றைய வைபவத்தில் கண்கவர் அணிவகுப்புகள் இடம்பெற்றன. இஸ்லாமிய தீவிரவாதிகள் தாக்கலாம் என்ற அச்சத்தில் செங்கோட்டையைச் சுற்றிப் பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன.

பிரதமர் வாஜ்பாய் தனது உரையில் தெரிவித்ததாவது:-

பாகிஸ்தானின் தீய நோக்கங்கள் வெற்றிபெற இந்தியா ஒருபோதும் அனுமதிக்காது.

பாகிஸ்தான் பலமுறை எம்மை ஏமாற்றி இருக்கின்றது. லாகூருக்கு அமைதிப் பயணமாகத் தொடங்கிய சமாதான முயற்சி இஸ்லாமாபாத்தினால் உருவாக்கப்பட்ட கார்கில் பூசலால் முறிவடைந்தது.

பாகிஸ்தான் சிம்லா ஒப்பந்தத்தை மீறியதோடு மட்டுமல்லாமல் எல்லைக் கட்டுப்பாட்டுக் கோட்டை மீறி மக்களின் நம்பிக்கைக்குத் துரோகம் இழைத்துவிட்டது.

கார்கில் பிரச்சினையை ஏன் உருவாக்கினோம்? இரு தரப்பிலும் எண்ணற்ற உயிர்கள் ஏன் தேவையில்லாமல் பலியாகின? என்று பாகிஸ்தான் இப்போது சிந்திக்கத் தொடங்கி இருக்கும்.

பாகிஸ்தான் மிகத் தீவிரமான ஆத்திர மூட்டும் செயல்களில் ஈடுபட்டாலும் இந்தியா பொறுமையுடன் நடந்து கொண்டது என்பதை உலகம் முழுவதும் உணர்ந்து கொண்டுள்ளது.

பொக்ரான் அணுச் சோதனைகள் நம்மை மேலும் வலுவாக — தன்னம்பிக்கை மிக்கவர்களை — மாற்றியிருக்கின்றது. முன்பு இந்தச் சோதனைகளுக்கு வெகு நாள்களாக திட்டமிடப்பட்டு வந்தாலும் சர்வதேச நெருக்குதல் காரணமாக அவற்றை நிறைவேற்ற முடியவில்லை.

இந்தியா எந்தவொரு நெருக்குதலுக்கும் அடிபணியாது என்பதையும் பொறுப்புடன் செயற்படும் திறமை அதற்கு உண்டு என்பதையும் அண்மைய சம்பவங்கள் நிரூபித்துக் காட்டியுள்ளன.

இந்தியா தனது வலுவையும் சக்தியையும் தாக்குதலுக்காக அல்ல தற்காப்புக்காகவே பயன்படுத்துகின்றது என்பதை உலக நாடுகள் இப்போது உணர்ந்திருக்கின்றன.

ஒரு செயற்கைக் கோளை அல்ல மூன்று செயற்கைக் கோள்களை செலுத்தும் திறனை இந்தியா பெற்றுள்ளது.

அக்னி – 2 ஏவுகணைச் சோதனைகள் வெற்றிகரமாக நடத்தப்பட்டன. இவை இராணுவ ஆயுதங்களில் சேர்த்துக் கொள்ளப்படும் — என்று வாஜ்பாய் தெரிவித்தார்.

செங்கோட்டைக்குச் செல்வதற்கு முன்னர் பிரதமர் ராஜ்கோட்டுக்குச் சென்று மகாத்மா காந்தியின் சமாதிக்கு மலர் அஞ்சலி செலுத்தினார்.

இந்தியாவின் பல மாநிலங்களிலும் நேற்று சுதந்திரதின வைபவங்கள் இடம்பெற்றன.

நாடாளுமன்றம் கலைக்கப்பட்டு பொதுத்தேர்தல்கள் அறிவிக்கப்பட்டிருப்பதால் அரசியல் தலைவர்கள் தமது சுதந்திரதின உரைகளை தேர்தல் பிரசாரமாகப் பயன்படுத்தக் கூடாது என்று தேர்தல் ஆணையகம் கண்டிப்பாக உத்தரவிட்டிருந்தது.

(ஐ-க)

## கைதிகள் எண்மர் விடுவிப்பு

புதுடில்லி. ஒக. 16

கார்கில் யுத்தத்தின்போது போர்க்கைதிகளாகப் பிடிக்கப்பட்ட 8 பாகிஸ்தானியரை இந்தியா விடுதலை செய்துள்ளது.

பாகிஸ்தானின் சுதந்திர தினமான கடந்த சனியன்று இவர்கள் விடுதலை செய்யப்பட்டனர்-

நல்லெண்ண முயற்சியாகவே இவர்களை விடுதலை செய்ததாக இந்தியா தெரிவித்துள்ளது. (ஐ-க)

## சீனாவில் வெள்ளம்

பேய்ஜிங், ஒக. 16

சீனாவில் ஏற்பட்டுள்ள வெள்ளத்தினால் நூறுக்கும் அதிகமானோர் உயிரிழந்துள்ளனர். 30 ஆயிரம் வீடுகள் வரை சேதமடைந்துள்ளன.

கடந்த வியாழன் முதல் பெய்து வரும் மழையினாலேயே இந்த அனர்த்தங்கள் நிகழ்ந்துள்ளன.

## புதுடில்லியில் பலத்த பாதுகாப்பு

புதுடில்லி. ஒக. 16

இந்தியாவின் 53 ஆவது சுதந்திர தினத்தை ஒட்டி புதுடில்லியிலும், செங்கோட்டையிலும் நேற்று தீவிர பாதுகாப்பு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

[ஐ]

## பாப்பரசர் அடுத்த மாதம் இந்தியா விஜயம்

வத்திக்கான், ஒக. 16

பாப்பரசர் இரண்டாவது அருளப்பர் சின்னப்பர் எதிர்வரும் நவம்பர் மாதம் இந்தியாவுக்குச் சுற்றுப்பயணம் ஒன்றை மேற்கொள்ளவுள்ளார்.

இத்தகவல் வத்திக்கானில் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. எந்தத் திகதியில் பாப்பாண்டவர் பயணம் செய்வார் என்பது தெரிவிக்கப்படவில்லை.

பாப்பாண்டவர் தமது சொந்த நாடான போலந்துக்குக் கடந்த மாதம் பயணம் மேற்கொண்டபோது அதுவே அவரது கடைசி வெளிநாட்டுப் பயணம் எனத் தெரிவிக்கப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது.

(ஐ-க)

## விமான விபத்தில் 17 பேர் பலி

அம்மான், ஒக. 16

யெமன் நாட்டு இராணுவ விமானம் விபத்துக்குள்ளானதில் அதில் பயணம் செய்த இராணுவக் கொமாண்டர் மற்றும் துணை இராணுவக் கொமாண்டர் உட்பட 17 பேர் உயிரிழந்துள்ளனர்.

இந்த விமானம் சவுதி அரேபிய எல்லைக்கருகே நேற்று முன்தினம் பிற்பகல் வீழ்ந்து நொருங்கியது.

விமான விபத்துக்கான காரணம் என்னவென்பது இதுவரை தெரிவிக்கப்படவில்லை. (ஐ-க)

# விமானப் பயண பாதுகாப்பு அனுமதி வழங்கப்பட்டவர்களின் விவரம்

சாவகச்சேரி

ஜே. தனேசன்(093108பீ), வீ. கந்தசாமி (097519 ஏ), சீ, குணலச்சுமி (097524 ஏ), பீ. சரஸ்வதி (099813 ஏ), ரவிச்சந்திரன் (099813 பீ), கணேசலிங்கம் (099831 ஏ), எஸ். ஞானப்பிரகாசம் (099843 ஏ), ஈ. சரஸ்வதி (101862 ஏ), ஈ. கிருபாகரன் (101862 பீ), ஏ. பெருமாள் (101879 ஏ),.

பீ. ஷனம் (101879 பீ), எஸ். டபிள்யூ. சத்தியபாமா (101883 ஏ), ரீ. திவ்யா (101883 பீ), கே.ஜெகதீஸன் (101898 ஏ), தியாகரகுமார் (103941 ஏ), கே. பூங்கொடி (103943 ஏ), ரீ. கஸ்தூரி (103943 பீ), கே. கார்த்திகேசு (103943சீ), கே.கஜேன்திரன் (103992ஏ), கே.இந்துமதி (103992 பீ), எம் செல்வராஜா (103999 ஏ),.

ஜி. கண்ணம்மா (104009 ஏ), வீ. பிறேமதாசன் (104009 பீ), ஆர். கமலாம்பிகை (104963 ஏ), ஆர். நிஷாந்தன் (104963 பீ), ஆர். நிஷாந்தினி (104963சீ), ரீ. அருந்தவமலர் (104971 ஏ), ரீ கருணைவேல் (104971 பீ), எஸ், ராசரட்ணம் (104973ஏ), எம்.பிலிப்பையா (104977 ஏ), வீ பிலிப்பிகா (104977 பீ,, கே. கிட்ணபிள்ளை (104991 ஏ),.

கே. நிதிகரன்(104991 பீ), ஜே கெளதேவி (104992ஏ), பீ.கணேஸ்வரன்(104992பீ), எம். குலமணி (104993 ஏ), ஜி லீலாவதி (104994 ஏ). ரீ. கென்குமாரன்(100501ஏ), எஸ். செல்வரதி (105002 ஏ), வீ துரைசிங்கம் (105004ஏ), ரீ. திவாகரன் (105004 பீ), வீ. பாஸ்கரமூர்த்தி (105008 ஏ), எஸ். சிறீகாந்தன் (105009 ஏ),.

கே. ராசேந்திரா (105012 ஏ). ஏ. கனகநாயகி(105013 ஏ), எஸ். லெட்சுமிப்பிள்ளை (105015ஏ), எஸ் அம்பிகாவதி (105015பீ), எஸ். விஜயாஞ்சினி (105017ஏ), எஸ் குஞ்சுமணி (105017பீ) எஸ். பொன்னம்மா (105021ஏ), எஸ். சாந்தநாயகி (105022 ஏ), எஸ். சிவதீசன் (105022 பீ), பீ. சண்முகவாசன் (105023ஏ).

பீ.குணசம்மா(105023பீ), எஸ் ரஞ்சகுமார்(105024ஏ), வை. ரமேஷ்(105025ஏ), ரீ. நடராசபிள்ளை (107657ஏ), பீ. சிவலோகநாயகி (107658 ஏ),எஸ்.சிவரிமங்கம்(107658 பீ), எஸ் கீதரூபி(107658சீ), எஸ்.விஜயகுமார்(107663ஏ), வீ சௌமியா (107663பீ), பீ. சிவபாதசுந்தரா (107667 ஏ), வீ.குட்டித்தம்பி(107670 ஏ).

எஸ் யோகராஜா (107672 ஏ), வை. ஆனந்தி (107672 பீ), எஸ். சரோஜினிதேவி (107672சீ). எஸ். மகாலக்சுமி (107674ஏ), எஸ். கோடீஸ்வரன் (107676ஏ), எஸ். பிரேமலதா (107677 ஏ), மங்கையற்செல்வி (107678ஏ), டீ. ஈ. விஜயரட்ணம் (107683ஏ), கே. செல்வரதம்(107685ஏ), பீ. புவனேஸ்வரி(107686ஏ), கே. கோமதி(107686பீ).

ஏ.அமரசிங்கம்(107693ஏ), எஸ்.வைரமுத்து(107695ஏ), எஸ். மனோகர்(1 7699ஏ), ஆர். ராசேந்திரம் (107803 ஏ), ஆர். மரியநாயகம் (107803சீ), என் மரியநாயகம்(107803சீ), கே.சிவராசா (107804ஏ), எஸ் சிவபாக்கியம் (107809ஏ), எஸ் சந்ரகுமரன்(108515ஏ ,சீ.கிரிஷா (108515பீ).

காரவெட்டி

எஸ். சின்னமணி (067707 ஏ), வி. சிவபாதம் (081487 பீ), எஸ். தங்கரட்ணம் (081487பீ), வி சதாசிவம் (087792ஏ), எம் கனகசிங்கம் (087825ஏ), எம். இரத்தினபூபதி (087825பீ), வீ. தேவி (087825சீ), கே. சொர்ணம் (095443ஏ)) பி.மகேஸ்வரி (098251ஏ), பி சாந்தமலர் (098251பீ), பி. ஆனந்தகுமார் (101125ஏ).

கே.சுப்ரமணியம் (102793 ஏ), [illegible] (102793 பீ), [illegible] (102793 ?), என்.ஜெயராணி (102801ஏ), எல.நலலநாதன் (102801பீ), எஸ் ஏ. யோசப்(102884ஏ), வி.செல்வராஜா (102990ஏ), எஸ். கணபதிப்பிள்ளை (103008பீ), கே சுகந்தினி (103008பீ). ரி நவரட்ணம (103034ஏ). க. கலைமகள் (103040ஏ), ரி. இலட்சுமி (103040பீ), வி. நல்லம்மா (103054ஏ), ரி. ரூபமூர்த்தி (105348ஏ).

எஸ் பிரபாகரன் [105361 ஏ], எஸ் கனகசபாபதி [105384ஏ],எஸ். சேதுராஜா [105403 ஏ], ஏ இராஜேஸ்வரன் [10 417 ஏ[, டாக்டர் வி ஜெபநௌரி [105497ஏ], வி. காயத்ரி [105497 பி]. எஸ் கொட்றிமரியா[105498 ஏ], எஸ். விஜித்தா[105512 ஏ], எஸ். முத்து 106656ஏ], எஸ்.அன்னம்மா [106656பீ], எஸ்.சிற்றம்பலம் [106657ஏ]. ரீ. சுசிலாதேவி [106660ஏ], பீ. சிறிநாதன் ]106696 ஏ],

வீ நடராஜா [106698 ஏ], என் விவேகானந்தம் [106748 ஏ], வீ. கோமதி [106748 பீ[ எஸ். பரமேஸ்வரன்[106782ஏ], பீ வசந்தி [106782 பீ], பீ சுமன் [106782 சீ], பீ கிருஷாந்தி [106782 பீ] டீ. மகேஸ்வரி [106789 ஏ[. எஸ். முத்து [106824 ஏ] எஸ் குணராணி [106324 பீ], எஸ். சின்னத்துரை [106-24 சீ],

ஏ. சின்னத்துரை (106844 ஏ), எஸ் சிவக்கொழுந்து (106870 ஏ). எஸ் சுஜாதா (106870 பீ),கே.மாகலிங்கம் (106888ஏ), எம். ராசம்மா 106888 பீ), எம் யோகராணி [106888சீ], எம். அன்னலிங்கம் (106888 டீ), ரீ. பாலச்சந்திரன் [106915 ஏ], பீ. சிபைலாந் (106915 பீ), பீ. சிவாசினிதேவி [106922 ஏ], ரீ.தனுஜா (106922 பீ).

பீ.ரட்ணசிங்கம்(106930ஏ) எஸ் விமலராஜா [106946 ஏ], எஸ் விநோத்குமார் [106953 ஏ] எஸ் ஈஸ்வரநாதன் (186961 ஏ), ஏ ரஞ்சினி [106988 ஏ], எம் கிருஷ்ணபிள்ளை (106994 ஏ), ஆர் .சிவநேசன்[107919 ஏ], எஸ். பரமலிங்கம் [107020 ஏ], ஜி. நகுலகுமாரி [107035 ஏ], என். தங்கரட்ணம் (107041 ஏ],

ரீ மகாலிங்கம் (107046 ஏ) பீ புஸ்பமலர் (107054 ஏ), பீ கஜனி (107054பீ), எஸ். சதாசிவம் (107911ஏ), எஸ். ஜெயரூபன் (107911 பீ), ஆர். சங்குபதி (107912 ஏ), ஆர். முகுந்தராஜா [107912பீ]. ஏ பாலகிருஷ்ணன் (107914ஏ). எஸ். கணேசமூர்த்தி [107917ஏ]. ஜே. தாமு [107926ஏ],

கே. பமிலா [107928 ஏ]. கே.விஜயதர்ஷினி[107928பீ]

[ தொடரும் ]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### புறோயிலர் குஞ்சுகள்

விலைகள் குறைக்கப்பட்ட 3 நாள்கள் நன்கு வளர்ந்த புறொயிலர் குஞ்சுகள் உடன் விற்பனைக்கு உண்டு. இன்று (16 – 08 - 99) திங்கள் மாலை பிறிமா Hi-Line வெள்ளைப் பேட்டுக்குஞ்சுகளும் செவ்வாய் மாலை பிறிமா Hi-Line சிவப்புப் பேட்டுக் குஞ்சுகளும் விநியோகிக்கப்படும். தொடர்பு: வை. சிவகுமார், நாவலர் வீதி, அத்தியடிச் சந்தி, யாழ்ப்பாணம்.

(68180)

### பொருளியல்

சுயமாகக் கற்கக்கூடிய வகையில் எழுதப்பட்ட பொதுப் பொருளாதாரம், பேரினப் பொருளாதாரம், வெளிவாரி விளைவுகள், சர்வதேச வர்த்தகம், வர்த்தக மாற்று வீதம், அபிவிருத்திக் கொள்கைகள்; நடைமுறை விடயங்கள் ஆகிய நூல்கள் யாழ். நகரிலும், சுன்னாகம், நெல்லியடி புத்தகசாலைகளிலும் விற்பனையாகின்றன. ஆசிரியர் வே. கருணாகரன்.

(68228)

### தேவை

வெட்டிய கிணறு ஒன்றுக்கு கல் பொழிந்து கட்டுவதற்கு ஆள் தேவை. தொடர்பு: தனபாலசிங்கம், 19 முருகேசர் ஒழுங்கை, (நல்லூர் வீடியோ சென்ரர் வளவு) முத்திரைச் சந்தையடி, நல்லூர்.

(68217)

யாழ். நகரில் உள்ள பல்பொருள் விற்பனை நிலையத்திற்கு ரசீது எழுதுவினைஞர் தேவை. தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி: A. 314 ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

(68223)

### காணி விற்பனைக்கு

இளவாலை மாரீசன்கூடலில் உள்ள 'சாத்தா ஒல்லை' நிலப்பரப்பு 13½ யும், ''கருகம்புலம்'' (குழல் பாடு) நிலப்பரப்பு 20 உம் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: திருமதி செ. பொன்னுச்சாமி 171/B மானிப்பாய் வீதி, வண்ணார் பண்ணை, யாழ்ப்பாணம். சனி, ஞாயிறு கிழமைகளில் மட்டும் தொடர்பு கொள்ளவும்.

(68187)

### தவறிவிட்டது

செருக்கம்புலம், தெல்லிப்பழை கிழக்கு என்னும் முகவரியைச் சேர்ந்த வன்னியன் வேலாயுதம்என்பவரது தேசிய அ. அ. (இல. 521954019V) யும், விசேட அ. அ. (இல. 0907009154) யும் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் இல. 74, பலாலி வீதி, கந்தர்மடத்திலுள்ள றதி சைக்கிள் கடையில் ஒப்படைத்து உதவவும்.

(68215)

## வீதித்தடைகள் அலங்கரிப்பு

யாழ்ப்பாணம், ஓக.16

வடமராட்சிப் பகுதியில் படையினரின் வீதித்தடைப் பரிசோதனை நிலையங்களில் அமைக்கப்பட்ட தடைகள் புதுமெருகூட்டப்படுகின்றன.

பழைய வீதித்தடைகள் அகற்றப்பட்டு புதிதாக சிமெந்துக்கட்டு மற்றும் பீப்பாய்த் தகரங்கள் கொண்டு புதிய தடைகள் அமைக்கப்படுவதுடன் அவை வர்ணம் பூசப்பட்டு அழகு படுத்தப்படுகின்றன.

இதேவேளை —

யாழ். நகரப் பகுதிகளில் பல இடங்களில் வீதித்தடைகள் அகற்றப்பட்டுள்ளன.

(ஐ–15)

### விற்பனைக்கு

டபிள்டோர் சிங்கர் பிறிச் 2, சிசில் பிறிச் 1, டிபிறிசர் சிசில் 1 ஆகிய குளிர்சாதனப் பெட்டிகள் விற்பனைக்கு உண்டு. அத்துடன் இவைகள் திருத்தியும் கொடுக்கப்படும். தொடாபு: பொ. கமலேந்திரன் No. 3, முஸ்லிம் கல்லூரி வீதி, கொட்டடி (லைடன் சந்தி),

(68225)

பூச்சி நீக்கப்பட்ட 2 மாதம் நிரம்பிய பொமனேரியன் நாய்க்குட்டிகள் (வெள்ளை, பிறவுண் நிறங்களில்) விற்பனைக்கு உண்டு. தொடர்புகளுக்கு:றோசாத்தோட்டம், தலங் காவற் பிள்ளையார் வீதி, திருநெல்வேலி மேற்கு.

(68194)

### தவறிவிட்டது

தங்கராசா அரிராஜ் ஆகிய எனது தேசிய அ. அட்டை (782743740V) நல்லூர் கோயிலுக்கு அருகில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் 208, செங்குந்தா வீதி, திருநெல்வேலி கிழக்கு, கல்வியங்காடு என்ற முகவரியில் ஒப்படைத்துதவவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

(68214)

### சந்தைப்படுத்தல்

B. A., B. Com. மாணவர்களுக்கான சந்தைப்படுத்தல் முகாமை எனும் நூல் வெளிவந்துவிட்டது. இ. இரட்ணம் சிரேஷ்ட விரிவுரையாளர், பிரபல புத்தகசாலைகளில் பெற்றுக் கொள்ளலாம்.

(68191)

## யாழ். மாவட்டத்தில்
# பட்டதாரிகள் 32 பேர் நியமனத்தை ஏற்கவில்லை

வலி. தென்மேற்கு, ஓக.16

எண்ணாயிரம் பட்டதாரிகள் நியமனத்திட்டத்தின் கீழ் நாடு முழுவதும் நியமனம் பெற்றவர்களில் ஆயிரத்து 320 பேர் பதவிகளைப் பொறுப்பேற்கவில்லை.

யாழ். மாவட்டத்தில் 285 பேர் தெரிவு செய்யப்பட்டனர். அவர்களில் 32 பேர் மட்டுமே இதுவரையில்பதவியேற்கவில்லையென வரவு செலவுத்திட்டப் பணிப்பாளர் நாயகம் எஸ். பி. திவரரத்தினா தெரிவித்துள்ளார்.

யாழ். மாவட்டத்தில் மேலும் 175 பேரை நியமிக்கும் திட்டத்துக்கு மேலதிக ஒதுக்கீடுகள் திறைசேரியினால் செய்ய முடியாதுள்ளதாகவும் —

இவ்வாண்டுக்கு வரவு செலவுத் திட்டத்தில் மேலதிக ஒதுக்கீடுகள் இல்லாதபடியால் புதிய நியமனங்களை வழங்க முடியாதுள்ளதாகவும் வரவு செலவுத்திட்ட பணிப்பாளர் நாயகம் தெரிவித்துள்ளார்.

இதேவேளை —

யாழ். மாவட்ட வேலையற்ற பட்டதாரிகள் சங்கம் தமது பகுதியில் உள்ள 240 பட்டதாரிகளுக்கு நியமனம் வழங்கக்கோரி ஜனாதிபதிக்கும் தேசிய வரவு செலவுத் திட்டப் பணிப்பாளருக்கும் மகஜர் ஒன்றை அனுப்பி வைத்துள்ளது.

(ஐ- 185)

# மத்திய கல்லூரி மைதானம் ரூ.20லட்சம்செலவில்புனரமைப்பு

அரியாலை, ஓக. 16

யாழ். மத்திய கல்லூரியின் விளையாட்டு மைதானம் 20 லட்சம் ரூபா செலவில் புனரமைக்கப்படவுள்ளது.

இந்த புனரமைப்புக்கான நிதியை விளையாட்டுத்துறை அமைச்சு வழங்கியிருப்பதாகவும் எதிர்வரும் செப்ரெம்பர் மாத முடிவுக்குள் மைதானப் புனரமைப்பு வேலைகள் முடிக்கப்பட வேண்டும் என்றும் அமைச்சு பணிப்புரை விடுத்திருப்பதாகவும்—

கல்லூரி அதிபர் கே. இராசதுரை தெரிவித்தார்.

கடந்த காலப் போர் நடவடிக்கைகள் காரணமாக மைதானம் சேதத்துக்குள்ளானது குறிப்பிடத்தக்கது.

(ஐ–17)

## மாணவர்களுக்கு ஊக்குவிப்புத் திட்டம்

யாழ்ப்பாணம், ஓக.16

ஆண்டு 5 புலமைப்பரிசில் பரீட்சை மற்றும் ஜி. சீ. ஈ சாதாரணதரம், உயர்தரம் பரீட்சைகளில் விசேட பெறுபேறுகளைப் பெற்ற வங்கி மற்றும் ஓய்வு பெற்ற வங்கி ஊழியர்களின் பிள்ளைகளுக்கு விசேட ஊக்குவிப்புத் திட்டம் ஒன்றை நடைமுறைப்படுத்த வடமாகாண வங்கி ஒய்வூதியர் நலன்புரிச் சங்கம் முயற்சிகளை மேற்கொண்டுள்ளது.

1998 ஆம் ஆண்டு மேற்படி பரீட்சைகளில் விசேட பெறுபேறுகளைப்பெற்ற மாணவர் தமது கல்வித் தகைமைகளை பெற்றோர் ஊடாக 'ஜெயமகால்', 214, ஸ்ரான்லி வீதி என்ற முகவரியில் உள்ள சங்கப்பணிமனைக்கு அனுப்புமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ஐ–ரி)

## கருத்தரங்கு

சிறுவர் பாதுகாப்பு நிதியம் சண்டிலிப்பாய் பிரதேச செயலகப் பிரிவில் சிறுவர் பராமரிப்பு மற்றும் சிறுவர்களின் பிரச்சினைகளை ஆராய்ந்து இனம் காணுதல் தொடர்பான கருத்தரங்குகளை இம் மாதம் நடத்தவுள்ளது.

இப் பிரிவில் நான்கு மத்திய இடங்களில் இக் கருத்தரங்குகள் நடத்தப்படவுள்ளதாகவும் இதற்கான ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் சண்டிலிப்பாய் பிரதேச செயலக வட்டாரங்கள் தெரிவித்தன.

(ஐ 135)

## சில பிரிவினருக்கு
# தொலைபேசி இணைப்புக்கு முன்னுரிமை வழங்க முடிவு

யாழ்ப்பாணம், ஓக. 16

யாழ். மாவட்டத்தில் தொலைத் தொடர்பு இணைப்புகளை வழங்குவதில் உடல் அங்கவீனமுற்றோர், பெண்கள் தலைமையிலான குடும்பம், சமூக சேவையாளர்கள், குடும்ப ஆலோசகர்கள், பாடசாலை அதிபர்கள் இருப்பிடம், வங்கி முகாமையாளர் இருப்பிடம், சுகயீனம் காரணமாக தொடர்ந்து வைத்தியம் பெறவேண்டியவர்கள் ஆகியோருக்கு முன்னுரிமை வழங்குவதெனத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

தொலைத் தொடர்பு வழங்குவதில் முன்னுரிமை அளிக்கப்பட வேண்டியவர்கள் தொடர்பாக தீர்மானிப்பதற்கு வடக்கின் மீள்குடியேற்ற அதிகார சபையினால் குழு ஒன்று அண்மையில் நியமிக்கப்பட்டது.

இந்தக்குழு தொலைத் தொடர்பு இணைப்பு வழங்குவதில் மேற்குறிப்பிட்டவர்களுக்கு முன்னுரிமை வழங்க வேண்டும் என்று சிபார்சு செய்துள்ளது.

இந்தக் குழுவின் சிபார்சுக்கு அமைவாக தொலைத் தொடர்பு தொடர்பான விண்ணப்பத்தை அனுப்பும் போது அங்கவீனர்கள், சுகயீனமுற்றோர் தமது விண்ணப்பப்படிவத்துடன் வைத்திய அத்தாட்சிப் பத்திரத்தையும் இணைத்து அனுப்ப வேண்டும் என்று கோரப்பட்டுள்ளது.

(இ-5-ரி)


உ

பார்த்தீர்களா?
கேட்டீர்களா?
உணவருந்தி ஆவலைத்தீர்த்தீர்களா?

நல்லைக்கந்தன் திருவிழா
வைபவத்தை முன்னிட்டு
ஆசாரசீல அடியார்களின் ஆதரவைப்பெற்று மகிழ
சொகுசான பிரத்தியேக அமைப்புகளுடன்
ஓராண்டின் நிறைவையொட்டிய

அம்பாள் கிறீம் ஹவுஸ்
அன் கூல்பார்

சைவ உணவக ஸ்தாபனத்தாரின்
விசேஷ உணவுகள்

காலை
- பஞ்சுபோல் மெதுமை பெற்ற இடியப்பம் (அதைத் தொட்ட பலரச சாம்பாறு மற்றும் சட்ணி வகை)

அதே போல
- கமகமவென வாசனை தொடும் தோசை, எண்ணெய்த் தோசை, நெய்த்தோசை
- இன்னும் இட்லி, உப்புமா, சர்க்கரைப் பொங்கல், உழுந்துவடை, நெய் வடை, கடலை வடை (சம்பலுடன்)

மதியம்
அறுசுவையுடன் கூடிய அன்ன உணவு (சம்பா குத்தரிசி) அத்துடன் கூடிய வடை, பாயாசம், தயிர், நெய், ரசம் உட்படும்.

மாலை – இரவு
அல்வா, மரக்கறி றோஸ், கிழங்கு றொட்டி, மசாலைத் தோசை, எண்ணெய்த்தோசை, பறாட்டா றொட்டி மரக்கறி கிழங்கு றொட்டி, உலர் உணவுகள்

அத்துடன்
ஐஸ்கிறீம் ஐஸ்சொக் ஐஸ்பழம்
ஆகியவற்றையும் ஒரே இடத்தில் பெற்றுக்கொள்ள

அம்பாள் கிறீம் ஹவுஸ்
இல. 770, 772, பருத்தித்துறை வீதி,
முத்திரைச் சந்தி,
யாழ்ப்பாணம்.

(68229)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்து ஆசிரியர் கழகம் அமைக்க ஏற்பாடு

யாழ்ப்பாணம், ஒக. 16

இந்து மதநெறிகளை முன்னெடுத்துச் செல்வதற்காக இந்து ஆசிரியர் கழகம் ஒன்றை ஸ்தாபிக்க இந்து இளைஞர் பேரவை நடவடிக்கை மேற்கொண்டு வருகின்றது.

இந்து சமயிகளையும் சமய ஆர்வலர்களையும் இந்தக் கழகத்தில் இணைத்துஇளைய தலைமுறையினரை நன்னெறிப்படுத்துவதே தஇதன் நோக்கம் என்று இந்து இளைஞர் பேரவைத் தலைவர் வே. கெ. தனபாலன் தெரிவித்தார்

இந்துசமய நெறிகளை முன்னெடுப்பதற்கும் அறநெறிப் பாடசாலைகளை முன்னெடுப்பதற்குமான சகல முயற்சிகளையும் இந்து இளைஞர் பேரவை மேற்கொண்டு வருவதாகவும் —

இந்த மாத இறுதிக்குள் 'இந்து ஆசிரியர் கழகம்' ஸ்தாபிக்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

(ஐ-9-ரி)

## பெறுமதி வாய்ந்த முத்திரைகள் வந்தன

அரியாலை, ஒக. 16

யாழ். பிரதம தபாலகத்திற்கு பெறுமதி வாய்ந்த முத்திரைகள் விமானம் மூலம் எடுத்துவரப்பட்டுள்ளன.

ஆயிரம்ரூபா, ஐந்நூறுரூபா, நூறு ரூபா, ஐம்பது ரூபா ஆகிய பெறுமதி மிக்க முத்திரைகளே வந்து சேர்ந்திருப்பதாக பிரதம தபாலதிபர் சு. கோடீஸ்வரன் தெரிவித்தார். (ஐ-17)

## கிராம அலுவலருக்கு கூட்டுறவுப் பயிற்சி

அரியாலை, ஒக. 16

யாழ்ப்பாணமாவட்டத்தில் அண்மையில் புதிதாக நியமனம் பெற்ற கிராம அலுவலர்களுக்கான கூட்டுறவு தொடர்பான பயிற்சி நெறி ஒன்றை கூட்டுறவுஅபிவிருத்தி உதவி ஆணையாளர் அலுவலகம் நடத்தவுள்ளது.

இந்தப் பயிற்சி நெறி இன்று திங்கட்கிழமை தொடக்கம் எதிர்வரும் 20ஆம் திகதி வரை தொடர்ந்து நடைபெறும் என்று ஆணையாளர் அலுவலக அதிகாரி ஒருவர் தெரிவித்தார். [ஐ—17]

## குடாநாட்டில் கிளைகள்

யாழ்ப்பாணம். ஒக. 16

மாவட்ட திரைக்கலை சங்கங்களின் சம்மேளனமாக செயற்பட்டு வரும் ''சலனசித்திரம் நிறுவனம்'' தனது கிளைகளை யாழ். மாவட்டத்தின் பல்வேறு இடங்களிலும் நிறுவும் பணியில் ஈடுபட்டு வருகிறது.

தொலைக்காட்சி நாடகம் தயாரித்தல், கலைஞர்களின் நலவுரிமைக்காக பாடுபடுதல், தரமான ரசனையை வளர்த்தல், இலங்கைத் தமிழ்திரைக் கலை வளர்ச்சிக்கு ஊக்கமளித்தல் போன்ற செயற்பாடுகளை நோக்காகக் கொண்டு மேற்படி அமைப்பு செயற்படுகிறது.

இந்தஅமைப்பின் தலைமைப் பணியகம்212, றொட்றிக்கோ வீதி, தெகிவளையில் இயங்கி வருகிறது.

(ஐ-ரி)

## சீனி, அரிசி விநியோகம்

அரியாலை. ஒக. 16

யாழ். பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் இன்று திங்கட்கிழமை தொடக்கம் பங்கீட்டு அட்டைக்கு அரிசி, சீனி என்பனவற்றை பாவனையாளர்களுக்கு வழங்கவுள்ளது.

10 கிலோ நாட்டரிசி ஒரு கிலோ 31 ரூபாப்படியும் 2 கிலோ சீனி ஒரு கிலோ 26 ரூபா விலையிலும் வழங்கப்படும் என்று சங்கத் தலைவர் சீ வீ, கே. சிவஞானம் தெரிவித்தார்.

சங்கத்தின் கிளைகளுக்கு பொருள்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

இதேவேளை—

சிறாம்பியடி லேனில் அமைந்திருக்கும் சங்கத்தின் விசேட விற்பனை நிலையத்திலும் வைத்து சீனியை விநியோகிப்பதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருப்பதாக சங்க வட்டாரங்கள் தெரிவித்தன. (ஐ-17)


## வைத்தியம்

செங்கண்மாரி, அல்சர், ஆஸ்துமா, வாதநோய்கள், வலிப்புநோய், பீனிசம், தலையிடி, தலைகால் அவியல், சருமநோய்கள், மாதவிடாய்க்குத்து, இரத்தப் போக்கு, வெள்ளைக்கசிவு, கருவழிதல், மகப்பேறின்மை, குழந்தை வைத்தியம், வீரியக் குறைவு, மூலவியாதிகள், மூத்திரரோகங்களில் பிரபலமானவர். சகல வியாதிகளையும் குணப்படுத்துபவர்:

வேலணை
வைத்திய கலாநிதி
சி. இராசரத்தினம்
121, 2ஆம்
குறுக்குத்தெரு
தொலைபேசி எண்: 2459
(67867)



## CLEARANCE SALE

விற்று முடிக்கும் விலை தள்ளுபடி

**SILVER SHIELD**

தயாரிப்புக்களான

- சொக்ஸ் வகைகள்
- நூல் வகைகள்
- எலாஸ்டிக், பேனை, சிப்
- பெனியன்கள்

**CURV FOAM & CARINA**

- பிறேசியர்கள்
- பிளாஸ்டிக் சாமான்கள்

இன்னும் பல

மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக் கொள்ள முந்துங்கள்

**லிங்கன் ஸ்ரோர்ஸ்,**

168, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

(சி-8602)


## ஒன்று கூடல்

சுன்னாகம், ஒக. 16

கடந்த போட்டிப் பரீட்சையில் தோற்றிவதிவிட வேறுபாட்டால்ஆசிரிய நியமனம் வழங்கப்படாதவர்களைஎதிர்வரும்புதன்கிழமை காலை 9.00மணிக்கு யாழ். இந்துக் கல்லூரிக்கு அண்மையிலுள்ள எடிசன் அக்கடமியில் ஒன்றுகூடுமாறு வதிவிட வேறுபாட்டால் பாதிக்கப்பட்டோர் சங்கம் அறிவித்துள்ளது.

(ஐ-27)

## 'ரான்' இணைப்பு அலுவலகத்துக்கு கணனி, 'போட்டோஸ்ரட்' இயந்திரம்

யாழ்ப்பாணம், ஒக. 16

வடக்கின் மீள்குடியேற்ற அதிகாரசபையின் (RRAN) யாழ். மாவட்ட இணைப்பாளர் அலுவலகத்திற்கு கணனி மற்றும் போட்டோப் பிரதி இயந்திரங்கள் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

செஞ்சிலுவை சர்வதேசக் குழுவின்கப்பல் மூலம் எடுத்துவரப்பட்ட இப் பொருள்களுடன் மாவட்ட இணைப்பாளருக்குரிய மோட்டார் சைக்கிளும் கொழும்பிலிருந்து கொண்டுவரப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

(ஐ-5-ரி)

# மயில்வாகனம் சுவாமிகளின் 14-வது குருபூசைத் தினம்

(16 - 08 - 1999)



சந்நிதியானைத் தரிசிக்க வருகின்ற அடியார்களுக்கு அன்னதானத் தொண்டை மேற்கொண்டு அடியார்களுக்கு அடியானாக விளங்கி ஆற்றங்கரையானின் அருட் கடாட்சத்தைப் பெற்றவரே மயில்வாகன சுவாமிகளாவார். அன்னாருடைய 14 ஆவது குருபூசைத்தினம் 16 - 08 - 99 இன்று சந்நிதியான் ஆச்சிரமத்தில் வழமைபோல பக்தி பூர்வமாக நடைபெறவுள்ளது.

## ஆனந்தா ஆச்சிரமம்:

1913 ஆம் ஆண்டு புரட்டாதித் திங்கள் 26 ஆம் நாள் ஆனைப்பந்தி என்னும் ஊரில் மயில்வாகன சுவாமிகள் பிறந்தார்கள். இளம் வயதிலேயே ஆத்மீக ஈடுபாடுள்ளவராக விளங்கிய சுவாமிகள் தென்னிந்தியா சென்று பல தலங்களையும் வழிபட்டதுடன் ரமணமகரிஷியின் சிஷ்யனாகவும் சில காலம் வாழ்ந்தார்கள். இலங்கைக்குத் திரும்பிய சுவாமிகள் சந்நிதி முருகன்பால் பக்திகொண்டு ஆலயச் சூழலில் தங்கி முருகனின் புகழைப்பாடி வாழ்ந்து வந்தார்கள். இக்காலத்தில்தான் 1940 ஆம் ஆண்டு ''ஆனந்தா ஆச்சிரமம்'' என்ற பெயரில் ஒரு மடத்தை ஆரம்பித்து அடியார்களுக்கு அன்னம் வழங்கும் தொண்டை ஆரம்பித்தார்கள். சுவாமிகள் ஆரம்பித்த தொண்டு தூய்மையானதாகவும் முருகன் அடியார்கள் பசியாறவேண்டும் என்ற நோக்கத்தையும் கொண்டிருந்ததால் இந்த ஆச்சிரமம் முருகன் அருளால் எந்தக் குறையுமின்றிச் சிறப்பாகத் தனது பணியை ஆற்றி வந்தது. காலப்போக்கில் ஆத்மீக ஈடேற்றத்திற்காக சந்நிதிக்கு வருகின்ற அடியார்கள் பலர் தங்கியிருக்கக் கூடிய வசதிகளையும் சுவாமிகள் ஆச்சிரமத்தில் ஏற்படுத்திக் கொடுத்தார்கள்.

## சிறப்பம்சங்கள்:

நூற்றுக்கணக்கான அடியார்களை ஒரேநேரத்தில் அமர்த்தி உணவு பரிமாறுதல், வாழையிலையில் சாதம் இட்டபின் எல்லோரும் சேர்ந்து கூட்டாக முருகன் புகழைப்பாடிய பின் சாதத்தை உட்கொள்ளுதல், நேர்த்தியாகவும் நிதானமாகவும் தொண்டர்கள் மூலம் அடியார்களுக்கு உணவு பரிமாறுதல் போன்றவை மயில்வாகன சுவாமிகளின் அன்னதானத் தொண்டின் சில சிறப்பம்சங்களாகும் இவ்வாறு போதும் என்ற வார்த்தை இதய சுத்தியுடன் வரக்கூடிய அன்னதானத் தொண்டை 1985 ஆம் ஆண்டு சுவாமிகள் இறைவனடி சேரும்வரை சிறப்பாக மேற்கொண்டு வந்தார்கள்.

## குருபூசை:

மயில்வாகன சுவாமிகள் விட்டுச்சென்ற அன்னதானத் தொண்டு இன்று சந்நிதியான் ஆச்சிரமத்தின் மூலம் சிறப்பாக மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

குருவினுடைய பாதங்களைப் பணிந்து அவர் விட்டுச்சென்ற தொண்டின் தொடர்ச்சியாகவே இதனை நாம் மேற்கொண்டு வருகின்றோம். இதனால் இந்த செயற்பாடு எவ்வித தடையுமின்றி செயற்பட்டு வருகிறது.

மேலும் இன்றைய இளம் சமுதாயத்தினரும் குருவினுடைய சிறப்பை அறிந்து குருபக்தி உள்ளவர்களாக மாறவேண்டும் என்பதனால் 1990 ஆம் ஆண்டிலிருந்து மயில்வாகன சுவாமிகளின் குருபூசைத் தினம் தொடர்பாக மாணவர்களிடையே பேச்சுப்போட்டி, குறட்பா அறிவுப்போட்டி என்பவற்றையும் நடத்தி வருகின்றோம்.

மாணவர்களை ஊக்குவிப்பதற்காக போட்டியில் பங்குபற்றுகின்ற அனைத்து மாணவர்களுக்கும் பரிசில்கள் வழங்குகின்றோம். முதல் மூன்று இடங்களைப் பெறுகின்ற மாணவர்களுக்கு சான்றிதழ், பரிசு. பணம் ஆகியன வழங்கப்படுகிறது.

இன்று (16 - 08 - 99) நடைபெறுகின்ற குருபூசைத் தின நிகழ்வுகளில் நல்லை ஆதீன குருமுதல்வர் அவர்கள் வழமை போல கலந்துகொண்டு சிறப்பிக்க உள்ளார்கள். மாணவர்களினுடைய பரிசில்களையும் சுவாமிகளே வழங்க உள்ளார்கள்.

குருவே துணை

**சந்நிதியான் ஆச்சிரமம்.**
செல்வச்சந்நிதி,
தொண்டைமானாறு.

(சி/85233)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

உ

# புதுமனைப் புகுவிழா அழைப்பு

அன்புடையீர்!

நிகழும் பிரமாதி வருடம் ஆவணித் திங்கள் 1 ஆம் நாள் (18 - 08 - 1999) புதன்கிழமை காலை 6-51 மணிதொடக்கம் 7-59 வரையான சுபவேளையில் எம்மால் புதிதாக அமைக்கப்பட்ட

## கலைவாணி இல்லம்

அன்புள்ளங்களின் ஆசிகளால் கட்டப்பட்ட எமது இல்லத்திற்கு கிரகப் பிரவேசம் நடத்தவுள்ளோம். உங்கள் உளம் கனிந்த இதய பூர்வமான வாழ்த்துக்களை வழங்குவதற்காக உற்றார், உறவினர், அன்பர்கள், நண்பர்கள், வாடிக்கையாளர்கள், ஆதரவாளர்கள் அனைவரையும் வருக வருகவென இருகரம் கூப்பி வரவேற்கின்றோம்.

"அன்புடன் வாருங்கள்"
"அன்பளிப்பைத் தவிருங்கள்"

இந்த அழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொண்டு அனைவரையும் விழாவுக்கு வருகை தருமாறு அன்புடன் வேண்டுகின்றோம்.

தங்கள் நல்வரவை விரும்பும்

மா. சிவமூர்த்தி – மஞ்சுளாரஜனி தம்பதிகள்

பிள்ளைகள்:
கலைவாசன், கலைவாணி, கலைவரதன்.

## வீடியோ கலாமினி

அச்சுவேலி.

(68222)


# சேவை உரிய நேரத்தில் மக்களை எட்ட வேண்டும்

## நாடாளுமன்ற உறுப்பினர் சிவதாசன்

யாழ்ப்பாணம், ஒக. 16

மக்களுக்கு இருந்து வரும் கஷ்டங்களை உணர்வு பூர்வமாக ஏற்று அவற்றை செவிமடுத்து நடவடிக்கைகளை உரிய நேரத்தில் மேற் கொள்ளும் போது தான் மக்கள் பயனடைவார்கள்.

ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எஸ். சிவதாசன் இவ்வாறு தெரிவித்தார்.

வலி. மேற்கு பிரதேச சபை எல்லைக்குள் நடைபெற்று வருகின்ற அபிவிருத்தி வேலைகள் மற்றும் சுழிபுரம் சத்தியக்காட்டுச் சந்தை, வட்டுக்கோட்டைச் சந்தை ஆகியவற்றிற்கு நேரடியாக விஜயம் மேற் கொண்டபின் சுழிபுரம் பிரதேச சபையின் தலைமைச் செயலகத்தில் நடைபெற்ற கலந்துரையாடலில் மேற் கண்டவாறு அவர் தெரிவித்தார்.

இந்தக் கலந்துரையாடலில் கலந்துகொண்டுஉரையாற்றிய ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் வலி. மேற்கு பிரதேச சபைத் தலைவர் ந. திரிலோகநாதன் தெரிவித்ததாவது:-

இன்று பல சிரமங்களுக்கு மத்தியில் மக்களுக்கு சேவை செய்து வரும் நாம் பல இடர்களைச் சந்திக்க வேண்டியுள்ளது. மக்களின் அபிவிருத்தி வேலைகளை யாரும் தடை செய்வதை நாமோ மக்களோ விரும்பவில்லை. வருகின்ற இரண்டாயிரமாம் ஆண்டிலாவது எமது தா..கத்தில் சுதந்திரக் காற்றைச் சுவாசிக்கக்கூடியவாறு சகலரும் செயற்பட வேண்டுமெனக் கேட்டுக் கொள்கின்றோம்—என்றார். (ஐ-ரி)

## நன்கொடை

வலி. தென்மேற்கு, ஒக.16

காரைநகர் வியாவில் சைவ வித்தியாசாலையின் மீள் புனரமைப்பு வேலைகளுக்கு காரைநகர் ''போரூட்'' நிறுவனம் இரண்டு லட்சத்து 25 ஆயிரம் ரூபா வழங்கியுள்ளது.

மேற்படி நிதியினைக் கொண்டு பாடசாலையின் கூரை வேலைகளையும் மாணவர்களுக்குரிய கதிரை, மேசைகளும் செய்யப்பட்டுள்ளதாக பாடசாலை அதிபர் ஆ. குமரேசமூர்த்தி தெரிவித்தார்.

இதேவேளை தமிழ், ஆங்கிலத் தட்டச்சு இயந்திரங்களும், பாடசாலை பெயர்ப் பலகையும் பழைய மாணவர் சங்கத்தால் வழங்கப்பட்டுள்ளன. (ஐ-185)


உ
முருகா

# நல்லூர்க் கந்தனின் வருடாந்த உற்சவம்-1999







"மரகத மயின்மேல் வருமுருகா அரகர சிவசிவ அறுமுகவா சரவண பவனே சண்முகனே
வரந்தர வாவா என் முன்னே அரவணி சிவனார் அருள்பாலா பரவ வரமருள் பரமதயாளா" — சிவயோக சுவாமிகள்

**அன்புடையீர்!**

யாழ். நகரில் புகழ் பூத்த நல்லூர்க் கந்தனின் வருடாந்த உற்சவம் (**16-08-1999**) இன்று திங்கட்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகின்றது. கடந்த காலங்களைப்போல் இம்முறையும் மேற்படி ஆலயத்தின் மேற்கு வீதியில் அமைந்துள்ள மூத்ததம்பி மடத்தில் (தம்பையா மடத்தில்) முருகன் அருள்வேண்டி வரும் அடியார்களுக்கு திருவிழா நடைபெறும் 25 நாள்களும் அன்னதானம் வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

பலவித அனர்த்தங்களினால் மேற்படி மண்டபம் சேதமடைந்துள்ளது. ஆகவே இந்த மண்டபத்தைப் புனரமைத்து அன்னதானத்துக்கு வேண்டிய சில உபகரணங்களும் கொள்வனவு செய்ய முயற்சி செய்கின்றோம். எமது இந்த நற்பணிக்குத் தங்கள் அன்பார்ந்த ஆதரவை நல்கி ஊக்குவிக்குமாறு பணிவன்புடன் வேண்டுகின்றோம்.

குறிப்பு: நல்லூர்க்கந்தனின் அழகிய கலர்ப்படம் விற்பனைக்கு உண்டு.

சகல அடியார்களும் இந்த அன்னதானத்தில் பங்கு பற்றி சிறப்பிக்குமாறு அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

**தங்கள் பேருதவிக்கு நல்லைக்கந்தன் தங்களுக்கு எல்லா வித நலன்களும் அருள்வானாக!**

139, கோயில் வீதி,
நல்லூர்.

**செ. சோமாஸ்கந்தன்**

கொடியேற்றத்திருவிழா அன்று அன்னதானத்துக்கு உதவியவர்கள்:

| | | |
|---|---|---|
| ஈ. எஸ். பேரம்பலம் ஸ்தாபனத்தார்<br>கொழும்புக் கிளை. | ஆர். விவேகானந்தன் குடும்பம்<br>நியூயோர்க். | நகைக்கடை வர்த்தகர்கள்<br>ரொரன்ரோ. |
| வர்த்தகர்கள்<br>பழைய சோனகதெரு, டாம் வீதி,<br>கொழும்பு. | எஸ். பத்மநாதன் குடும்பம்<br>(ஓய்வுபெற்றசிறாப்பர், கச்சேரி, யாழ்ப்பாணம்).<br>ரொரன்ரோ. | முருகன் அடியார்கள்<br>கலிபோர்ணியா. |

(68193)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அல்லல்கள் அகற்றி நல்லன நல்கும் நல்லை குமரன் கொடியேற்றம் இன்று

இன்றுநல்லூர்க் கந்தனின் கொடி ஏற்றம் காணும் திருநாள். நல்லைக் கந்தன் திருவருளை நினைந்து நாளும் துதிக்கும் பேறுபெற்றவர்கள் நாங்கள். எனவே பெருமானுடைய மகோற்சவ நாள்களில் அவனருள் பற்றிச் சிந்திப்பது எமது கடமையாகும்.

அபிஷேகக் கந்தன் எனச் சிறப்பித்து அழைக்கப்படும் நல்லூர் முருகன் அன்பர்தம் அன்பினால் வசப்படுபவன். நல்லூர் முருகனின் காலநேரம் தவறாத ஒழுங்கான பூசைகள் ஆலயத்தின் திருவருட் சக்தியை மேலும் வலுப் பெறச் செய்கின்றன.

''கலியுக வெப்பத்தினின்று உயிர்களைக் காப்பாற்றிக் கருணை பொழிய வல்லவர் முருகப் பெருமானே ஆவார்'' என்று வியாசர் ஏனைய முனிவர்களுக்கு மொழிந்திருக்கிறார்.

முருகு என்ற அடிப்பதமே உயிர்களைக் காப்பாற்றும் கருணையுடையவன் என்ற கருத்தைவழங்குகிறது. 'அந்த மூன்று எழுத்துக்களும்' உகாரமாகிய உயிரை அடக்கி இருப்பன. உகரம் காத்தல் தொழிலை விளக்குவது'' எனவே முருகன் முக்காலமும் காப்பவன் என்ற கருத்தையே நாம் உணர முடிகிறது. அவனுடைய வேல் ஞானத்தின் சின்னம். 'மயில் வாகனம் பிரணவ சொரூபம். திருமுகங்கள் ஞான அடக்கம். அவன் வேலைப் போற்றினார்கள் தேவர்கள். அந்தவேல் 'அவுணர்கள் என்கின்ற அறியாமையை நீக்கித்தேவர்களாகிய அறிவைப் பிரகாசிக்கச் செய்தது.

''வந்த வினையும்வருகின்ற வல்வினையும் கந்தனென்று சொல்லக் கலங்கிடுமே''

முருகனது பக்தர்கள் தமது அனுபவத்தால் கண்ட உண்மையிது. 'நெக்கு நெக்கு உருகுபவர் நெஞ்சிலே புக்கிருந்து அருள் சுரப்பவன் கந்தன்' ஞானசக்தியாகிய வேலாயுதம் ஞாலம் முழுவதும் வாழும் மக்களுக்கு நல்லருள் வாரித்தருவது.

''வேலை வணங்குவதே நமக்குவேலை. வேலை வணங்காது வேறென்ன. வேலை'' என்றார் ஓர் அறிஞர். உண்மைதான். நல்லூரிலே மூலஸ்தானத்தில் வேல்தான் உண்டு, இதுவே கூர்ந்த பரந்தஆழமான அறிவை உணர்த்தும் வேல். இதுவே நம் வினை தீர்க்க வல்லது.

## கொடியேற்றத்தின் தத்துவம்

நைமித்தியக் கிரியைகளில் மகோற்சவம் எனக் கூறப்படும் திருவிழாமுதன்மை மிக்கது. ஆலயத்தில் அமைந்த பலிபீடத்தைச் சார்ந்து கொடி மரம் இருக்கிறது. இதனைத் தூலலிங்கம் எனவும் அழைப்பர். உலகத்தின் துன்பங்களுக்குக் காரணமாகவும் இறைவனை உணர்த்துவதற்குத் தடையாகவும் மனிதனிடம் அமைந்திருப்பவை ஆசைகளாகும்.

கோயிலின் பலிபீடத்தில் அந்த ஆசைகளின் மூலமாகிய ஆணவம், கன்மம், மாயை என்னும் மும்மலங்களையும் பலி கொடுத்துவிட்டு வணங்க முற்படும்போது மனிதனால் தெய்வ நிலையை நோக்கி எளிதாக மேலேற முடியும் என்ற தத்துவத்திற்கு விளக்கமாக அமைந்ததே கொடிமரம்.

கொடியேற்று வைபவத்தின் ஊடாக ஆன்மாக்களை இறைவன்பால் இணைப்பதன் உட்பொருள் உணர்த்தப்பட்டுள்ளது. கொடிமரமானது சிவத்தையும் கொடிச்சேலை ஆன்மாவையும் தருப்பக்கயிறு ஆன்மாவைப் பந்தித்துநிற்கும் பாசத்தையும் குறிக்கிறது. கொடிச் சேலையில் வரையப்பட்டு இருக்கும் படமானது இறைவன் திருவருளைப் பெற்ற சீவான்மாவின் உயர்நிலையை விளக்கும்.

சமூகஜோதி
**கா. கணேசதாசன்**

திசைகள் தோறும் விளங்கும் தெய்வங்களையும் இதர தெய்வங்களையும் மந்திரங்களாலும் பாவனைகளாலும் அழைத்து ஒரு நிலைப்படுத்தி சிவாச்சாரியார்கொடியேற்று நிகழ்ச்சியை நடத்துவார். கொடியேற்றவிழாவும் கொடிமரத்தின் தத்துவமும் அற்புதமானது.

## ஊரெல்லாம் விழாக்கோலம்

நல்லூர் முருகனுக்குக் கொடியேறிவிட்டால் ஊரெல்லாம் விழாக்கோலம் பூண்டுவிடும். ஆலய வீதியெங்கும் வெண் மணல் பரப்பி, தண்ணீர் தெளித்து அழகு செய்யும் சேவையை யாழ். மாநகராட்சியினர் செய்வார்கள்.

அன்பர்கள் பலர் தண்ணீர்ப் பந்தலிட்டு அடியார்களுக்கு தாக சாந்தி வழங்குவர். பல தொண்டர் சபையினர் சமயப்பணி செய்து வருகின்றார்கள். பக்தி வெள்ளம் கரைபுரண்டோட தெய்வீகமான முருகானுபத்தில் அன்பர்கள் திளைக்கின்றார்கள்.

பஜனைக் கோஷ்டி ஒரு பக்கம்; அங்கப் பிரதட்சணம் செய்வோர் ஒரு பக்கம்; தூக்குக்காவடி, பாற்காவடி, கரகம் ஆடுவோர் ஒரு பக்கம் என்று எங்கும்தெய்வீகக்களை காணப்படும். உற்சவ காலங்களில் நல்லை திருஞான சம்பந்தர் ஆதீனத்தில் தெய்வீகக் கலைநிகழ்ச்சிகள், தெய்வீக அருளுரைகள், சங்கீத கதாப்பிரசங்கங்கள் போன்றவற்றை நடத்தி மக்கள்மத்தியில் பக்தி உணர்வை ஏற்படுத்துவர்.

மேலும் நல்லைக் கந்தன் மகோற்சவத்தை முன்னிட்டு ஒவ்வோர் ஆண்டும் யாழ். மாநகராட்சி மன்ற சைவ சமய விவகாரக் குழு ''நல்லைக் குமரன்'' என்னும் மலரை வெளியிட்டு வருகிறது.

## முருக வழிபாட்டின் பயன்

முருகனை வழிபடுவதனாலே பல நற்பலன்கள் ஏற்படுமெனத் திருமுருகாற்றுப்படை குறிப்பிடுகின்றது. ஆறுமுகனை வணங்கும்போது அவரின் ஒருமுகம் தன்னை வணங்கும் அன்பருக்கு வரம் கொடுக்கிறது- முருகனின் திருவடியானது அவரை அடைந்த அன்பர்களைப் பிறவிக் கடலில் விழாமல் தாங்கும் பொருட்டு அவர்களிடத்திலுள்ள அறியாமையினைக் கெடுக்கும் ஆற்றல் வாய்ந்ததாகவும் தன் திருவடியை நினைந்து வந்தோருக்கு அணங்குகொல் வடிவத்தை மறைத்து மணங்கமழ் தெய்வத்து இளநலன் காட்டி ''அஞ்சல் ஓம்புமதி'' என்று ஆறுதல் மொழி புகன்று அடைக்கலம் தருபவனாகவும் பெறலரும் பரிசாகிய வீடுபேற்றை நல்குபவனாகவும் நக்கீரர் திருமுருகாற்றுப்படையில் கூறுகின்றார்.

இவ்வாறு இம்மைக்கும் மறுமைக்கும் உறுதுணையாக உள்ள முருகனின் திருவடிகளைப் பணிவோமாக. ★

---

# உதயன்

## அமைச்சரின் முடிவு

வடக்கு-கிழக்கு மாகாணத்தில் தற்போதைக்குத் தேர்தல் எதுவும் நடத்தப்பட மாட்டாது. அதற்கான சூழ்நிலையும் அங்கு இல்லை — என்று மாகாண சபைகள், உள்ளூராட்சித் துறை அமைச்சர் அலவி மௌலானா தெரிவித்திருக்கிறார்,

அமைச்சரின் இந்த முடிவை வடக்கு -கிழக்கு மாகாண மக்களில் பெரும்பாலானவர்கள் ஆதரிப்பர். இன்னொரு சாராரின் எதிர்ப்பும் இருக்கவே செய்யும். அதிகாரக் கதிரைகளில் அமர விரும்பும் அரசியல்வாதிகள் மற்றும் அவர்களின் ஆதரவாளர்கள், அடிவருடிகளுக்கு அமைச்சரின் இந்த முடிவு நிச்சயம் கசக்கும்.

ஆனால் அமைச்சர் அலவி மௌலானா, வடக்கு—கிழக்கின் தள நிலைமைகளை நன்கு அறிந்து, உணர்ந்து, அனுபவத்தை ஆராய்ந்து இந்த முடிவை எடுத்திருக்கின்றார் என்றே கொள்ளலாம். அவரது தீர்மானம் மக்கள் நலன் நாடியது என்றும் ஒரு வகையில் பார்க்கக் கூடியதாகும்.

தேர்தல் நடத்த முடியாத நெருக்கடி சூழ்ந்த நேரத்திலும், அதனை நடத்தி அல்லது அது நிறைவாக நடைபெற்றதாகக் காட்டி, பதவிகளைக் கைப்பற்றவே அரசியல்வாதிகள் விரும்புவார்கள். ஆனால் மக்களோ இன்றைய நிலையில் இது வேண்டாத சோலி என்றே கருதுவார்கள். தேர்தல் ஒன்று அமைதியான சுமுகமான சூழலில் நடைபெறுவதே பொருத்தம்.

யாழ்ப்பாணத்தில் 1998 ஜனவரியில் நடத்தப்பட்ட உள்ளூராட்சித் தேர்தலையும் அதன் பிரதி பலன்களையும் தக்க விதத்தில் அமைச்சர் உணர்ந்துள்ளார்; அதனாலேயே அதனை உதாரணமும் காட்டி உள்ளார்.

யாழ்ப்பாணத்தில் தேர்தல் அப்போது திணிக்கப்படுகிறது என்றே மக்கள் கருதினர். ஆயினும் அரசு விடாப்பிடியாக நின்று, தான் நினைத்ததைச் செய்து முடித்தது.

அந்தத் தேர்தலை ஒன்றுபட்டு பகிஷ்கரிக்க அரசியல் கட்சிகள் நேர்மையுடன் முனையவில்லை. அடுத்த கட்சி போட்டியிடப் போகிறதே, நாம் எப்படி ஒதுங்குவது என்று கூறியவாறு தேர்தல் களத்தில் குதித்தன. பின்னர் ஒரு கட்டத்தில், அக்கட்சிகளின் பிரமுகர்கள் பலரும், அத்தேர்தல் அரசினால் திணிக்கப்பட்டது என்று வெளிப்படையாகவே சொன்னார்கள்.

உள்ளூராட்சி சபைகள் மக்கள் பிரதிநிதிகளால் நிர்வகிக்கப்பட வேண்டும் என்பதும் —

அதற்குரிய தேர்தல்களை உரிய காலத்தில் நடத்துவதே ஜனநாயக விதிமுறை என்பதும் —

அதிகாரிகளின் நிர்வாகத்தின் கீழ் சம்பந்தப்பட்ட பிரதேசத்தின் அபிவிருத்தியை பெரிய அளவில் முன்னெடுப்பது கடினம் என்பதும் — உண்மைகளே.

ஆனால், தேர்தலை நடத்தக் கூடிய அமைதியான சூழ்நிலை இல்லாமல், மக்கள் சுதந்திரமாக வாக்களிக்க முடியாத பதற்றமான, பாதுகாப்பற்ற சூழ்நிலையின்போது தேர்தலை நடத்துவது தவிர்க்கப்படவேண்டும். முக்கியமாக மக்கள் தேர்தல் ஒன்றை விரும்பாதபோது அதனை அவர்கள் மீது திணிக்கக்கூடாது.

தேர்தலை நடத்தியும் சபைகளை உரிய முறையில் இயக்க முடியாத சூழ்நிலை உருவாகுமானால், மக்களுக்கு அதனால் என்ன பயன் கிடைக்கப் போகிறது? தேர்தல் மக்களுக்குக் கஷ்டங்களைக் கொண்டு வரும் என்றால் அதனைத் தவிர்ப்பதால் அந்தப் பிரதேசம் குடி மூழ்கிப் போகமாட்டாது.

---

# நாளை

ஆடி 32
செவ்வாய்க்கிழமை
திதி: ஷஷ்டி
பிற்பகல் 5.57 வரை.
நட்சத்திரம்: சித்திரை
முற்பகல் 7.36 வரை
ஷஷ்டி விரதம்
சுந்தரமூர்த்தி நாயனார் குருபூஜை நாள்
சுபநேரம்: 10.35—12.05
ராகுகாலம்: 3.05—4.35
(பகலுக்கும் இரவுக்கும் பழைய நேரப்படி)

## உதயவாக்கு

நல்லதருமங்களைச் செய்ய பழைய பாவங்கள் நீங்கிப் போய்விடும்.
— பழமொழி நானூறு

---

## நல்லூர் உற்சவகால சிறப்பிதழ்

### கொடியேறும் நல்லூரான்

வேலெடுத்து விளையாடு நல்லூரான்—தமிழன்
வேதனைகள் நீங்கிட கொடி ஏறுகின்றான்
வாளெடுத்து சூரனை வதைத்தவன்—தமிழன்
வாழ்க்கையை நிமிர்த்திடக் கொடி ஏறுகின்றான்.

-நல்லை அமிழ்தன்.

### ஈழமண் விடிவுற ஏற்று!

நல்லை முருகா இரங்கு—தமிழர்
நற்றமிழ் வாழ்வுச்கு இரங்கு
எந்தையர் மண்ணினைக் காத்து
இடர்களை எம்மிடமிருந்து நீக்கு
சொந்தங்கள் நலமுடன் வாழ
சுந்தரத் தமிழெம்மை ஆள
இன்றுந்தன் கொடியினை ஏற்று
ஈழ மண் விடிவுற ஏற்று!

-மதுரகவி எம். பி அருளானந்தன்

### குறைபோக்கக் கொடியினை ஏற்று!

சேவலின் கொடியது சிறகடித் தென்றுமே
செவ்வேள் உன் கையில் அசையும்
ஆவலாய் நல்லூர் ஆலயத் தம்பம்
அருள்மிக உன் கொடி ஏற(க்)
கூவலாய் நாங்கள் குறையெலாம் சொல்லி(க்)
குகனே உன்னையே தொழுவோம்!
போவதாய் இல்லையே ஆண்டிரு பத்தாய்
போக்கிடக் கொடியினை ஏற்று!

- முருகனடியான்

### அழகுக் கொடியேறுதம்மா

மண்டபமும் கோபுரமும் மனங்கவரும் மணியொலியும்
கண்டவர்கள் மனங்குளிரக் காட்சி தரும் கலையழகும்
எண்டிசையும் ஏத்தி நிற்கும் எழிலார்ந்த நல்லூரில்
தொண்டரவர் பரவிடவும் தோத்திரங்கள் பாடிடவும்
அண்டமெலாம் புகழ்ந்திடவே அழகு கொடியேறுதம்மா
கண்டிடவே நாம் செல்லக் கந்தனவனருள் புரிவான்.

- ப. க. மகாதேவா.

### கொடியேற்றம் காண்போம்

வடிவேலன் வீற்றிருக்கும் ஆலயத்தின் கொடியேற்றம்
வல்லமைகள் மிக்கவேல் ஆலயத்தில் கொடியேற்றம்
அடியவர்க்கு எழுந்தருளும் மகோற்சவத்தின்
கொடியேற்றம்
அல்லலெல்லாம் அகற்றுகின்ற அருள்விழாவின்
கொடியேற்றம்
கொடிய சூரன் தனை வதைத்த குகன் ஆலயத்தில்
கொடியேற்றம்
குன்றுகள் தோறாடுகின்ற குமரன் ஆலயத்தில்
கொடியேற்றம்
வடிவழகன் ஆலயத்தில் விளங்கு சேவற் கொடியேற்றம்
வேண்டும் வரம் யாவும்பெறக் கண்டிடுவோம்
கொடியேற்றம்!

நாயன்மார்கட்டு. ப. கேந்திரதாசன்

### விழுந்து கும்பிட்டால் வில்லங்கம் வாராது



எந்நாளும் நல்லூரை வலம்
வந்து வணங்கினால்
இடர்கள் எல்லாம் போமே.

அந்நாளில் ஆசான் அருந்
தவம் செய்த இடம்
அதுவாத லாலே
அதிசயம் மெத்த உண்டு.

வேதாந்த சித்தாந்தம் கற்ற
தனாலென்ன வேடிக்கைக்
கதைகள் பேசினாலென்ன
வீதியால் வந்தொருக்கால்
விழுந்து கும்பிட்டால்
வில்லங்கம் எல்லாம்
இல்லாமற்போமே.

— யோகர் சுவாமிகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சமய அறிவுப் போட்டி

திருநெல்வேலி, ஓக. 16
நல்லூர் முருகன் சனசமூக நிலையம் நல்லூர் ஸ்ரீ கந்த சுவாமி கோவில் வருடாந்த மஹோற்சவத்தை முன்னிட்டு சைவ சமய அறிவுப் போட்டி ஒன்றை யாழ். மாவட்ட ரீதியில் நடத்தவுள்ளது.

இப் போட்டிக்கான வினாத் தாள்களை மேற்படி நிலையம் வெளியிட்டிருப்பதாகவும், இதனைப் பெற்று இதற்கான விடைகளை அடுத்த மாதம் 15-ஆம் திகதிக்கு முன்னர் நிலையத்தில் சமர்ப்பிக்கலாம் என்றும் பாடசாலை மாணவர் உட்பட சகலரும் இதில் பங்குபற்றலாம் என்றும் நிலையப் பிரதிநிதி தெரிவித்தார். (135)

## வீதி திருத்தப்படவில்லை

நவாலி புலவர்வீதி, பிப்பிலி வீதிஎன்பன 6மாதங்களாககற்கள் பறிக்கப்பட்ட நிலையில் திருத்தப்படாமல் உள்ளன.

வீதியின் இரு மருங்கிலும் கற்கள் குவிக்கப்பட்டு இருப்பதனால் இரவு வேளைகளில் செல்வோர் வீதி விபத்துக்குள்ளாவதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ஐ-185)


# PATRICIAN INSTITUTES

## பற்றீஷன்

## தொழிற் பயிற்சி நிறுவனங்கள்

தொழில் நுட்ப பயிற்சி நெறிகள் புதிய பிரிவுகள் ஆரம்பமாகின்றன

**ஆரம்பம் : 23 - 08 - 99**

1. A) DIPLOMA IN MS - OFFICE ★ Duration. 6 Months
   B) CERTIFICATE COURSES
   I) MS - Word 2000 V) C ++
   II) MS - Excel 2000 VI) Pascal
   III) MS - Access 2000 VII) d Base
   IV) MS - Power Point VIII) Lotus 123
   ★ Duration 3 Months Each.

★ Introducing the " INTERNET " Nett Work
★ [ போதிய அளவு செய்முறைகள் ( Practicals Class ) வழங்கப்படும். அத்துடன் " இன்ரநெற் " செய்முறை மூலம் அறிமுகப்படுத்தப்படும் ]

2. BOOK KEEPING & ACCOUNTS ( I. A. B. ) ★ Duration 6 Months
3. CIVIL DRAUGHTSMANSHIP COURSE ★ Duration 6 Months
4. SHORT HAND & TYPING ( English ) ஆங்கில சுருக்கெழுத்தும் தட்டெழுத்தும் ★ Duration 6 Months
5. SHORT HAND & TYPING ( Tamil ) தமிழ் சுருக்கெழுத்தும் தட்டெழுத்தும் ★ Duration 6 Months
6. GENERAL MOTOR MECHANISM, மோட்டார் வாகனம் திருத்துதல் ( Petrol & Diesel வாகனங்கள் ) ★ Duration one year
7. ELECTRICAL WIRING. மின்சார இணைப்பு ★ Duration 3 Months
8. MOTOR REWINDING மோட்டார் ரீவைண்டிங் ★ Duration 4 Months
9. GENERAL ELECTRICIAN ஜெனரல் எலக்ரீஷன் ★ Duration 6 Months
   [ மேற்படி (6), (7), (8), (9) பயிற்சி நெறிகளைக் கற்பவர்களுக்கு மேலதிகமாக மூன்று மாதங்களுக்கு Practicals வழங்கப்படும் ]
10. RADIO & T. V REPAIRING ★ Duration 6 Months
11. LATHE MACHINE OPERATION கடைச்சல் இயந்திர தொழிற்பயிற்சி ★ Duration 3 Months
12. ARC WELDING மின் ஒட்டுநர் பயிற்சி ★ Duration 2 Months
13. CARPENTRY மரவேலை ( With Use of Machinery ) ★ Duration One Year
14. BLACKSMITH ★ Duration 6 Months

Note: [ 1 ] பயிற்சிக் கட்டணங்களைத் தவணை முறையில் செலுத்தலாம்.
[ 2 ] வன்செயலால் பாதிக்கப்பட்ட அல்லது வறுமைக் கோட்டின் கீழ் வாழும் மாணவர்கள் போதிய ஆதாரம் காட்டி பங்குக் குருவானவரின் [ Parish Priest ] சிபார்சின் பேரில் பயிற்சிக் கட்டணத்தில் சலுகையைப் பெற்றுக் கொள்ளலாம்.
[ 3 ] பயிற்சி நெறி சம்பந்தமான சகல விவரங்களையும் அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

**Production and Repairing on Order ..!**
கட்டமைத்தலும் திருத்துதலும்

சகலவிதமான இரும்புசார் உற்பத்திப் பொருள்களும், ஒட்டு வேலைகளும் மரத்தளபாடங்களும், உறுதியான தொழில்சார் அறிவு மூலமும் ஒழுங்காக மிக விரைவாகவும், திறமையாகவும் செய்து கொடுக்கப்படும். அத்துடன் Fridge Water Pumps, Electrical பொருள்கள் சம்பந்தமான சகல வேலைகளும் செய்து கொடுக்கப்படும்.

வாகன தகுதிச் சான்றிதழ் - 1999
FITNESS CERTIFICATE FOR MOTOR VEHICLE

1999 ஆம் ஆண்டுக்கான வாகனத் தகுதிச் சான்றிதழ் எமது நிறுவனத்தினால் வழங்கப்பட்டுக்கொண்டு இருக்கின்றன என்பதனை சகல வாகன உரிமையாளர்களுக்கும் தெரிவித்துக்கொள்கின்றோம்.

மேலதிக விவரங்களுக்கு:

REGISTRAR.
PATRICIAN INSTITUTES
59, St. Patrick's Road,
Jaffna.

[சி/8513]


## 10 கோடி ரூபா செலவில் வீதிகள் திருத்தம்

வலி. தென்மேற்கு, ஓக. 16
யாழ். மாவட்டத்தில் முழுமையாகப் பாதிப்படைந்த தார்வீதிகள் 10 கோடி ரூபா செலவில் திருத்தப்படவுள்ளன.

இதற்கான நடவடிக்கையினை யாழ். கடற்கரை வீதியில் உள்ள பிரதம பொறியியலாளர் அலுவலகம் மேற்கொண்டுள்ளது.

குடாநாட்டில் உள்ள பிரதேசசபை, நகரசபை, மாநகரசபை ஆகிய பிரிவுகளில் முழுமையாகச் சேதமடைந்த தார் வீதிகளின் விவரங்கள் திரட்டப்பட்டுள்ளன. அவை யாழ். பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகத்தினால் வீதி அபிவிருத்தி அதிகார சபையிடம் வழங்கப்படவுள்ளன. (ஐ-185

## தர்ம கைங்கரியங்களாக விழாக்கள் அமைய வேண்டும்

### ஜெயந்தி தின விழாவில் உரை

கைதடி, ஓக. 16
விழாக்கள் தனிப்பட்ட புகழுக்காக இல்லாது சமூகத்தோடு தொடர்புடைய அறவாழ்வளிக்கும் தர்ம கைங்கரியங்களாக அமைவது சாலச்சிறந்ததாகும். தென்மராட்சி பிரதேச செயலர் பு. சுந்தரம்பிள்ளை இவ்வாறு கூறினார்.

கைதடி சச்சிதானந்த ஆச்சிரமத்தில் அண்மையில் இடம்பெற்ற செல்லம்மா அம்மையாரின் 85 ஆவது ஜெயந்தி தின விழாவில் முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவ்விழாவில் அவர் மேலும் பேசுகையில்-:

''எமது சமய ஸ்தாபனங்கள் அறம் காக்கும் நிலையங்களாகச் செயற்பட வேண்டும்'' ஆதரவற்ற முதியோர், சிறுவர்களுக்கு ஆதரவளிப்பதில் கூடிய கவனம் செலுத்த வேண்டும்.

இவைகளைப் புறக்கணித்து விட்டுவிழாக்களை ஆடம்பரமாகச் செய்வதனால் எதுவித பயனும் ஏற்படாது.

வசதிபற்றவர்களுக்கு, ஆதரவற்றவர்களுக்கு ஒருநாளைக்கேனும் உணவு அளித்துக் காப்பாற்ற வேண்டிய கடப்பாடு எமது சமய சமூக தொண்டு அமைப்புக்களுக்கு உண்டு'' என்றார்.

யாழ். இந்துசமயபேரவைச் செயலர் சி சக்திகிரீவன், இந்து இளைஞர் பேரவைத் தலைவர் வே. தனபாலன் உட்பட பல பிரமுகர்கள் இவ் வைபவத்தில் கலந்து கொண்டனர்

'பசுவின் மகிமை' என்னும் நூல் வெளியீடு இடம்பெற்றதுடன் நல்லூர் பஜனைச் சபையினரின் தேவாரப் பண்ணிசையும் இடம்பெற்றது. (ஐ-74)

### மருத்துவபீட ஏற்பாட்டில்

## சுகாதார நிலையத்தில் 'ருபெல்லா' தடுப்பூசி

யாழ்ப்பாணம், ஓக. 16
யாழ். மருத்துவபீட மாணவர்களின் ஏற்பாட்டில் இன்று திங்கள் முதல் எதிர்வரும் 20ஆம்திகதி வெள்ளிக்கிழமை வரை யாழ். பல்கலைக்கழக சுகாதார நிலையத்தில் 'ருபெல்லா தடுப்பூசி' ஏற்றுவதற்கான ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.

நண்பகல் 12 00 மணி தொடக்கம் பிற்பகல் 4 00 மணி வரை இடம்பெறும் இந் நிகழ்வில் யாழ் பல்கலைக் கழக மாணவிகள், போதனைசார், போதனைசாரா பெண் ஊழியர்கள் உட்பட பதினொரு வயதிற்கும் நாற்பத்தைந்துவயதிற்கும்இடைப்பட்ட பெண்கள் இந்நிகழ்வில் கலந்துபயனடையவுள்ளனர்.

கர்ப்பிணிகள் மற்றும் கடும் தொற்று நோய் உள்ளவர்கள் நீர்ப்பீடனக் குறைபாடு உடையவர்கள் முட்டைப் புரதம் அல்லது நியோமைசீன் மருந்திற்கு அழற்சியுடையவர்கள் இத் தடுப்பூசி ஏற்றிக்கொள்வதற்கு விலக்களிக்கப்பட்டவர்களாவர். (ஐ-ரி)

## சுந்தரர் குருபூசை

சண்டிலிப்பாய், ஓக. 16
அளவெட்டி கும்பழாவளைப் பிள்ளையார் ஆலயத்தில் நாளை செவ்வாய்க்கிழமை சுந்தர மூர்த்தி நாயனார் குருபூசை நடைபெறவுள்ளது அளவெட்டி சைவவாலிபர் சங்கமும ஆலய பரிபாலன சபையும் இணைந்து நடத்தும் இக் குருபூசையில் மகேஸ்வர பூசையும் (அன்னதானம்) இடம் பெறவுள்ளது. (ஐ-135)

## வீதி சேதம்

திருநெல்வேலி, ஓக. 16
யாழ்.மத்திய பஸ் நிலையம் நவீன சந்தை ஆகியவற்றுக்கு சமீபமாக உள்ள பிரதான வீதியான ஆஸ்பத்திரி வீதி குண்டும் குழியுமாக சேதமடைந்த நிலையில் உள்ளது.

தினமும் பெரும் எண்ணிக்கையிலான மக்களும் வாகனங்களும் போககுவரத்து செய்துவரும் இவ் வீதி விரைவில் திருத்தப்பட வேண்டும் என்று கோரப்பட்டுள்ளது. (ஐ-135)

## முன்பள்ளி திறப்பு

சுன்னாகம், ஓக 16
காந்திரூபன் சனசமூக நிலைய முன்பள்ளி கட்டடம் கடந்தசனியன்று வலி.தெற்கு பிரதேச சபைத் தலைவர் தி. மா. செல்வராசாவால் திறந்து வைக்கப்படும்,

சனசமூகநிலையத்தலைவர் சி.சௌந்தரராஜன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் முன்பள்ளியின் பெயர்ப் பலகையை வலி. தெற்கு பிரதேச செயலக உதவித் திட்டப்பணிப்பாளர் ரி தேவராஜன்திரை நீக்கம் செய்து வைத்தார்.

சுன்னாகம் தெற்கு கிராம சேவகர் செ. வைத்திபநாதன் டாக்டர் ஏ. ஆர். கிருஷ்ணசாமி உட்படப் பலரும் இந் நிகழ்வில் உரையாற்றினர் (ஐ-27)

## கொடியேற்றம்

வேலணை பெருங்குளம் ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலய வருடாந்த மஹோற்சவம் இன்று திங்கட்கிழமை காலை 11 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகின்றது

எதிர்வரும் 25 ஆம் திகதி புதன்கிழமை காலை 10 மணிக்குத் தேர்த்திருவிழாவும் மறுநாள் காலை 10 மணிக்கு தீர்த்தோற்சவமும் இடம் பெறும்.

உற்சவ நாள்களில் அன்னதானம் வழங்கப்படவுள்ளது. அத்துடன் ஆலயம் வரை பஸ் சேவையும் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. (க-167)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அரசமைப்புச் சீர்திருத்தம் குறித்து

# அரசுடன் பேசதயார்; ஆனால் அதனை பிரசாரத்துக்குப் பயன்படுத்தக் கூடாது

### ரணில் விக்கிரமசிங்க கூறுகிறார்

கொழும்பு, ஒக. 16

அரசாங்கம் அறிவித்தது போன்று அரசமைப்புச் சீர்திருத்தம் தொடர்பாக நாம் அரசாங்கத்துடன் பேசுவதற்குத் தயாராகவுள்ளோம். ஆனால் அந்தப் பேச்சு வார்த்தை பொதுத் தேர்தலுக்கான பிரசார உத்தியாக அமையுமானால் அதற்கு நாம் உடன்பட முடியாது.

இவ்வாறு ஐ.தே.க. தலைவரும் எதிர்க் கட்சித் தலைவருமான ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

நிறைவேற்று அதிகாரம் உள்ள ஜனாதிபதி முறையை ரத்துச் செய்வது உள்ளிட்ட அரசமைப்புச் சீர்திருத்தம் தொடர்பாக ஐ. தே. கவுடன் அரசாங்க குழுவொன்று விரைவில் பேச்சுவார்த்தை நடத்தவுள்ளது தொடர்பாக கருத்து வெளியிடுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் கூறியதாவது;-

புதிய அரசமைப்புக்கான சீர்திருத்தத்தில் இனப்பிரச்சினைத் தீர்வுக்குரிய முழுமையான விடயங்களையும் உள்ளடக்க முடியாது. அதனால் தமிழ் மக்களின் பிரதேசங்களுக்குரிய அதிகாரப் பரவலாக்கல் பற்றிய விடயங்களையும் தனியான சட்ட மூலத்துக்குள் உள்ளடக்க வேண்டியுள்ளது.

அத்துடன் வருகின்ற புதிய நூற்றாண்டுக்கேற்ப சகல மக்களினதும் அந்தஸ்துகளை பாதுகாக்கக் கூடிய அரசமைப்புச் சீர்திருத்தத்துக்கு எமது கட்சி என்றும் ஆதரவு வழங்கும்.

இப்படி அவர் மேலும் தெரிவித்தார். (இ-5)

### ஜூஸ் பைக்கெட்டு கைப்பற்றப்பட்டு அழிப்பு

யாழ்ப்பாணம், ஒக. 16

முன்அனுமதிபெறாது தயாரிக்கப்பட்டு விற்பனை செய்யப்பட்டுவரும், சுகாதாரச் சீர்கேடான ஜூஸ் பைக்கெட்டுகளை அழிக்கும் பணி தொடர்ந்து இடம்பெற்று வருகிறது.

யாழ். சுகாதாரத் திணைக்கள அதிகாரிகளினால் மேற்கொள்ளப்பட்டு வரும் இந்த நடவடிக்கைத் தொடரில் சுன்னாகம், கந்தரோடை, மாகியப்பிட்டி, அளவெட்டிப் பகுதிகளிலும் ஒவ்வொரு கடை கடையாகச் சென்ற இந்தக் குழுவினர் அங்கு விற்பனைக்கு வைக்கப்பட்ட ஜூஸ் பைக்கெட்டுக்களை வீதியில் கொட்டி அழித்தனர். (இ-15)

### விருதி திறப்பு

யாழ்ப்பாணம், ஒக. 16

வல்வெட்டித்துறை மாவட்ட வைத்தியசாலையில் புனரமைக்கப்பட்ட பெண்நோயாளர் விடுதி நாளை செவ்வாய்க்கிழமை சம்பிரதாய பூர்வமாகதிறந்து வைக்கப்பட உள்ளது.

போரூட் நிறுவத்தினரின் நிதியுதவியுடன் புனரமைக்கப்பட்டுள்ள இந்த விடுதியை அந்த நிறுவனத்தின்நிர்மாண முகாமையாளர் ஆன் அங்கில் வெய்ட் திறந்து வைப்பார்.

இந்த விழாவில் பிரதம விருந்தினராக பருத்தித்துறைப் பிரதேச செயலர் ஆ. சிவசுவாமியும், சிறப்பு விருந்தினராக யாழ். மாவட்ட சுகாதார சேவைகள் மாகாணப்பிரதிப் பணிப்பாளர் டாக்டர் க. தா. சிவபாதமும் கலந்து கொள்வர். (இ-3-15-109)

### கருத்தரங்கு

சாவகச்சேரி, ஒக. 16

''நீர் பராமரித்தலும், நீர் நிலைகளை புனரமைத்தலும் அதன் கட்டுமான வேலைகளும்'' என்ற தலைப்பில் கெயர் அமைப்பின் ஏற்பாட்டில் விவசாயிகளுக்கான கருத்தரங்கு ஒன்று இன்று காலை 10 மணிக்கு சாவகச்சேரி கற்குழி ஸ்ரீ பாரதி சனசமூக நிலையத்தில் நடைபெறும். (இ-31)

## திருமறைக் கலாமன்றத்தின் மணிமண்டபத் திறப்பு விழா

குருநகர், ஒக. 16

திருமறைக் கலாமன்றத்தில் புதிதாக அமைக்கப்பட்ட கலைத்தூது மணி மண்டபத்தை யாழ். ஆயர் அதிவண. தோமஸ் சௌந்தரநாயகம் ஆண்டகை நேற்றுச் சம்பிரதாயபூர்வமாகத் திறந்து வைத்தார்.

இந்த வைபவத்தில் அவருடன்யாழ். மறைமாவட்ட குரு முதல்வர் வண. பிதா ஏ. பி. செல்வராசா அடிகளாரும் கலந்துகொண்டார்.

அதன்பின்னர் இடம்பெற்ற மங்கல விளக்கேற்றும் வைபவத்தில் யாழ். ஆயர் அதிவண. தோமஸ் சௌந்தரநாயகம் ஆண்டகை, யாழ். மறைமாவட்ட குரு முதல்வர் வணபிதா ஏ.பி.செல்வராசா அடிகளார் இம்மண்டபத்தை உருவாக்க உழைத்த கட்டடக்கலைஞர் டொமினிக், செந்தூரி, சேவியர், அருளானந்தம், முன்னாள் யாழ் திருமறைக்கலாமன்ற பொதுசெயலாளர் சீ. எக்ஸ். நெல்சன், யாழ். ஜெயம், கொழும்பு திருமறைக்கலாமன்ற உறுப்பினர் செல்வி சுமதி, யாழ். திருமறைக்கலாமன்ற பொதுச் செயலாளர், செயலளார் ஆகியோரும் கலந்துகொண்டனர்.

யாழ். திருமறைக்கலாமன்ற இசைக் கலைஞர்களின் பஜனை வழிபாடு, இசைவழிபாடு ஆகியவற்றைத் தொடர்ந்து மணிமண்டபத் திறப்பு விழா உரைகளும் இடம்பெற்றன.

யாழ். திருமறைக் கலாமன்றத்தின் மூத்த உறுப்பினரும் கவிஞருமாகிய யாழ். ஜெயம் தலைமையில் நடைபெற்ற இந்த வைபவத்தில் வரவேற்புரையை யாழ். திருமறைக் கலாமன்றத்தின் செயலாளர் சாம்பிரதீபன் நிகழ்த்தினார். சிறப்புரையை திருமறைக் கலாமன்றப் பொதுச் செயலாளர் யோன்சன் ராஜ்குமாரும் ஆசியுரையை யாழ். ஆயர் அதிவண. தோமஸ் சௌந்தரநாயகம் ஆண்டகையும் நிகழ்த்தினார்கள்.

இந்த வைபவத்தில் யாழ். மறைமாவட்ட குரு முதல்வர் வண. பிதா ஏ. பி. செல்வராசாவும்உரைநிகழ்த்தினார்.

நன்றியுரையை அ. றே. அண்டர்சன் நிகழ்த்தினார்.

யாழ் ஆஜர் அதி வண, தோமஸ் சௌந்தரநாயகம் ஆண்டகை மணிமண்டபத்தை ஆசீர்வதித்ததுடன் இந்த மண்டபத்தைக் கட்டுவித்த கட்டடக்கலைஞர்களுக்குப் பரிசில்களையும் வழங்கினார். இந்த வைபவத்தில் பெரும் எண்ணிக்கையானோர் கலந்து கொண்டனர். (இ-51)

### சமய தீட்சை

கொழும்புத்துறை, ஒக. 16

நல்லூர் அருள்மிகு ஸ்ரீ கந்தசுவாமி கோயில் வருடாந்த மஹோற்சவத்தை முன்னிட்டு இன்று திங்கட்கிழமை காலை 9 மணி தொடக்கம் தினசரி நல்லூர் திருஞானசம்பந்தர் ஆதீனத்தில் ஆதீன சுவாமி ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்தபரமாச்சாரியஸ்வாமிகள் தலைமையில் சமய தீட்சை நடைபெறும். (க-30)

# மக்களின் உண்மை உணர்வு கொப்பளிக்கும் அமுத ஒலியான இசையே நாட்டுப்பாடல்

## அவற்றைப் பேணுவது காலத்தின் தேவை

உலகெங்கும் நாட்டுப்புற மக்கள் தங்களுக்கென்று ஒரு வகையான இசைச்செல்வத்தை காத்துவருகின்றனர். அது இயல்பாக இசைநயமும் இயற்கையான சொல்எழில் நயமும் சிறப்பான கருத்து வளமும் கொண்டு விளங்குகின்றது. மனிதனின் உண்மையான உணர்வுகள் கொப்பளிக்கும் அமுத ஒலியானது இனிய இசையாக வெளிப்பட்டு நாட்டுப்புறப் பாடலாக உருவாகி உள்ளது. வாழ்வின் பல்வேறு நிலைகளும் பாடல்வழியாக விளக்கப்படுகின்றது. அவை இயல்பாகவும் இயற்கையாகவும் எழும் இலக்கியங்கள். அதில் அன்பு தவழும், காதல் மிதக்கும், இன்பம் இனிக்கும், துன்பம் தவழும்.

இசையை இருவகையாக பிரிக்கலாம். ஒன்று திறமையான கலைஞரின் இசை, மற்றையது மனஇயல்பிற்கு தக்கவாறு அமைவது. நன்கறிந்து பாடுவது. நினைத்துப்பாடுவது பாமரமக்களின் இயல்பு. இரண்டிலும் இனிமையுண்டு இசைநயமும் உண்டு.

நாட்டுப்புறப்பாடல்கள் உண்மையானஉணர்வுகளுக்கு இசைவடிவம் தருவன. கலைஞர்களின் இசையில் உணர்வுகள் தோன்றும். முன்னதில் உணர்வுக்கும் பின்னர்இசைக்கும் சிறப்பிடம் தரப்படும். ஆனால் இரண்டிலும் இசையும் உணர்வும் உள்ளன. உணர்வாற்பாடப்படும் நாட்டுப்புறப்பாடலும் இசையறிவாற்பாடும் இசைவல்லுநர்ப் பாடலும் வேறுபாடுடையவை.

எதைப்பற்றியும் கவலைப்படாமல் மனதில் எழும் உணர்வுகளுக்குத்தக்கவாறு பாடல்களை அமைத்து தங்களுக்கு ஏற்றவாறு இசைத்து மகிழ்வது நாட்டுப்புற மக்களின் இயல்பு. கருத்து விளங்கும், அதில் உணர்வு இருக்கும், இசைநயமிருக்கும் கேட்போர்மனம் பாடல் உணர்வில் ஈடுபட்டுக்களிக்கும் பாடுவோரின் மனம் பாடலுடன் இணைந்து இசையில் மிதந்து களிப்பதை நாட்டுப்புறப் பாடல்களிற் காணலாம். பாடல்கள் பெரும்பாலும் தோடி, புன்னாகவராளி, செஞ்சுருட்டி, ஆனந்த பைரவி, மாயாமாளகௌளை, கௌபந்து, நாதநாமக்கிரியை, சக்கரவாகம், சௌராட்ரம் ஆகிரி, சாமா, இக்கிச்சி, ஸ்ரீராகம், நீலாம்பரி, குறிஞ்சி ஆகியவற்றில் பெரும்பாலும் பாடப்படுகின்றன.

தாலாட்டுப்பாடல்கள் நீலாம்பரி ராகத்தில் பாடப்படுவது பொதுவழக்கம். அந்த ராகத்துக்கு பொருந்துமாறு இன்றும் நாட்டுப்புறத் தாய்மாரின் தாலாட்டுப் பாடல்கள் இருப்பதைக் கவனிக்கலாம். காவடிப்பாட்டு ஆனந்தபைரவி ராகத்தில் அமையும். கரகாட்டப்பாடல்கள் பெரும்பாலும் நாதநாமக்கிரியை, கல்யாணி, காம்போதி ஆகிய ராகங்களில் பாடப்படுகின்றது. ஊஞ்சல் பாடல்கள் பெரும்பாலும் நவரோஜ்ராகத்தில் பாடப்படுகிறது.

சிந்துப்பாடல்களில் பல வகை உள்ளன. அவற்றைப் பாடும்போது தன்னியாசி, மாயாமாளவகௌளை, [illegible] பைரவி போன்ற [illegible] கையாளப்படுகின்றன. நலுங்குப் பாடல்கள் பெரும்பாலும் நவரோஜ் ராகத்தில் பாடப்படுகின்றன.

நாட்டுப்புறப் பாடல்களின் வகைகள் தாலாட்டுப்பாடல், மாரியம்மன்பாட்டு - கரம் எடுத்தாகும் மக்கள் பாடலாகும். தேர்ரோட்டப்பாடல், வினா - விடைப்பாடல் நாடக அமைப்பு நாட்டுப்பாடல் — நாடகத்தன்மை தோற்றம் உரையாடல் அமைப்பில் இனிமையான ஓசை நயத்துடன் பாடப்படும் பாடல், ஏற்ற பாடல், ஏற்றம் இறைப்பது தமிழ் நாட்டில் உழவுத்தொழிலாளரின் முக்கிய வேலை. அதில் அலுப்பு ஏற்படாதிருக்கப் பாடல்களைப்பாடுவர். அவை இனிமை எளிமையுடன் இருக்கும்.

விழாப்பாடல், பராசக்திப் பாடல், கரகாட்டப்பாடல், காதற்பாடல், கோலாட்டப் பாடல் அம்மானைப்பாடல்— அம்மானை ஆடும் போது இத்தகைய பாடல்களை மக்கள் பாடுவதாகக் குறிப்பிடுவார். அம்மானைப் பாடல்கள் இருவர் விளையாடும் போது பாடும் அமைப்புக் கொண்ட முதலிரண்டு அடிகளையும் ஒழுங்காகப்பாட அடுத்து இரண்டடிகளும் மற்றவரின் வினாவாக வெளிவரும். ஈற்றிலுள்ள மடங்கிவரும் அடி முன்னவரின் பதிலாக அமையும் ஒருகருத்தை விளையாட்டுப் பொருளாக தரும் பாங்கினை அம்மானைப் பாடலிற் காணலாம்.

நாட்டுப்புறப்பாடல்களிலே தெம்மாங்கு மிகச் சிறப்பு வாய்ந்தது. மக்கள் அவற்றை இசையுடன் பாடி மகிழ் [illegible] முகாரிப் பாடல் — முகாரியிற் பாடப்படும் சில பாடல்கள் முகாரியில் மட்டுமன்றி ஏனைய இராகத்திலுமே பாடுவார். ஆராத்திப்பாடல், ஊஞ்சற் பாடல், கும்மிப்பாடல் தெருக்கூத்துப்பாடல்— நாடகம் 19 ஆம் நூற்றாண்டு வரை தெருக்கூத்தாகவே நடத்தப்பட்டு வந்தது. புராணக்கதைகளான பாடல்களாக விளக்கி நடிப்பது தான் நெருக்கூத்து அதில் நாட்டுப்புற இசைக்கே முக்கியபங்குண்டு. பாடல்கள் கதை விளக்கமாகவும், நகைச்சுவையாகவும்இருக்கும். அதில் கட்டியக்காரன், கோமாளி போன்ற பாத்திரங்களின் பாடல்களை மக்கள் அதிகம் விரும்புவர். பலவிதமான இசையில் பலத்தகுரலில் பாடுவர் வில்லுப்பாட்டு.

நாட்டுப் புறப்பாடல்களை கீழ்வருமாறு பிரித்துப் பாடலாம். நீதிப் பாட்டு. ஒழுக்கப் பாட்டு, வேதாந்தப்பாட்டு, பழமொழி, பொன்மொழிப் பாட்டு, நோன்புப்பாட்டு, சடங்குப்பாடல், வேலைப் பாட்டு, விவசாயப்பாடல், மழைப்பாடல், குழந்தைப் பாடல், பக்திப்பாடல், வரலாற்றுப்பாடல், இதிகாசப் புராணப்பாடல், பாராட்டுப் பாடல், புதிர்ப்பாட்டு, பரிகாசப்பாட்டு, விளையாட்டுப் பாடல், உடல்நலப்பாடல், விழாப்பாடல், நாட்டுப்புற நாட்டியம், நாட்டுப்புறநாடகப் பாடல், ஓவியப்பாடல் என்பனவாகும்.

நாட்டுப்புற இசைக்கருவிகள் நாட்டுப்புறக் கலைகளுக்கென்றே இசைக்கப்படுகின்றன. நையாண்டி மேளம், நாதஸ்வரம், தவில், பம்பை, முரசு, கைத்தாளம், கொம்பு. உடுக்கை, சதங்கை, குடுகுடுப்பை. தப்புமேளம், சிலம்பு, செண்டைமேளம், புல்லாங்குழல், டோலக், ஜால்ரா, சப்பிளாக்கட்டை, குடம், வில், ஆர்மோனியம், தபேலா, மரக்கட்டைத்தாளம், மகுடி, ஏகநாதம், துந்தின, நந்துன்ன, திருச்சின்னம். எக்களம், தாரை, தமரு (அரஞ்சட்டி) தசாரிப் பட்டை, தாவண்டிடோல் கைதப்பட்டை, குடமுளா குடலம், பிச்சட்ரம், புல்வண் குடம், கம்டோலு, சூர்யப் பிரி, தம்பாட்டம், தமுக்கு, திமிலா, தண்டிப்பானை, சேமக்கலம் என்பனவாகும்.

ஆனால் இன்றைய காலப் பகுதியில் பல்வேறு இசைத் தாக்கங்களால் நாட்டுப்புறப் பாடல்களின் முக்கியத்துவம் குறைந்து மதிப்பிடப்படுவதுடன் அவற்றைப் பேணும் மரபும் அருகி வருவதை வேதனையுடன் அவதானிக்கக் கூடியதாக உள்ளது.

இந் நிலையில் நாட்டுப் புறப் பாடல்களைப் பேணும் முயற்சியில் இசைவல்லுநர்கள், கலைஞர்கள் ஈடுபடுவது காலத்தின் தேவையாக உள்ளது.

இவ்வகையில் தமிழ்நாடு இயல், இசை, நாடக மன்றம் ஆற்றும் பணி சிறப்பாக அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. இந்த அமைப்பினரை முன்மாதிரியாகக் கொண்டு நாட்டுப்புறப்பாடற் கலையை முன்னெடுத்துச் செல்ல சகல வகைகளிலும் பங்களிப்பினை நல்குவோமாக!

**மு. கடம்பநாதன் (எம். ஏ - இசை)**

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

### கைதான...

(முதலாம் பக்கத் தொடர்)

கப்பட்டுள்ளது. என்றும் அந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

கடந்த 10ஆம் திகதிகைதடி வடக்கில் கைது செய்யப்பட்ட திருமதிசெல்வராணி பரமேஸ்வரன் என்பவர் மறுநாள் விடுதலை செய்யப்பட்டார் என்றும் அந்த வட்டாரங்கள் மேலும் கூறின. (இ-3)

### கொட்டடியில்,..

[முதலாம் பக்கத் தொடர்]

கலாதேவி (வயது30), அராலி மேற்கைச் சேர்ந்த சுப்பிரமணியம் நடராஜா (வயது 21) ஆகியோரே காயம் அடைந்தவர்களாவர்.

இந்த இருவரும் சைக்கிளில் சென்று கொண்டிருந்த சமயம் எதிரே வந்த பொலீஸாரின் பஸ் இவர்களை மோதியதாகக் கூறப்பட்டது. (இ-3-4-15)


INSTITUTE OF INFORMATICS STUDIES

IIS Jaffna, Sri Lanka

Computer Courses

புதிய பயிற்சி நெறிகள்

பல புதிய கணனித் தொழில்நுட்ப அறிமுகத்துடன்

(Internet, E-Mail)

செப்ரெம்பர் மாதம் 5 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளன.

மேலதிக விவரங்களுக்கு 23-08-1999 உதயன் பத்திரிகையைப் பார்வையிடவும்

Director,
IIS, Jaffna.

(சி/8528)


# நல்லைக் கந்தன் ஆலய உற்சவம் இன்று ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஓக. 16

பிரசித்திபெற்ற நல்லூர் கந்தசுவாமி தேவஸ்தான வருடாந்த மஹோற்சவம் இன்று காலை 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகின்றது.

தொடர்ந்து 25 நாள்கள் இடம்பெறவுள்ள உற்சவ காலத்தின் போது ஆலயச் சூழலைச் சுத்தமாகவும், புனிதமாகவும் பேண வேண்டிய ஏற்பாடுகளை யாழ். மாநகர சபை மேற்கொண்டுள்ளது.

ஆலயத்துக்கு வரும் பக்தர்கள் அமைதியான முறையில் ஆலய தரிசனத்தை மேற்கொள்ள வசதியாக விசேட ஏற்பாடுகள் இம்முறை மேற்கொள்ளப்பட்டுள்ளன.

உற்சவ காலங்களில் கலாசார சீரழிவுச் செயற்பாடுகள் ஆலயச் சுற்றாடலில் இடம்பெறுவதை தடுக்கும் வகையில் விசேட பயிற்சி அளிக்கப்பட்ட பாடசாலைத் தொண்டர்கள் பணியில் அமர்த்தப் படவிருக்கின்றனர்

இந்தப் பயிற்சிகளை மாநகர சபை சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் இ. தெய்வேந்திரன் அளித்துள்ளார்.

யாழ். நகரின் முக்கிய திருவிழாவாக விளங்கும் நல்லூர் திருவிழா ஒரு சமூக ஒற்றுமையைக் காட்டும் வைபவமாக நடைபெறுவதால் திருவிழா அமைதியாக நடக்க சகலரும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என்று சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் தெய்வேந்திரன் பொதுமக்களைக் கேட்டுள்ளார்.

வழமைபோல் இந்த வருடமும் உற்சவத்தை ஒட்டி வீதித்தடைகள் அமைக்கப்படும் என்று மாநகர ஆணையாளர் அறிவித்துள்ளார்.

நேற்று நள்ளிரவு 12 மணி முதல் அடுத்த மாதம் 11ஆம் திகதி நள்ளிரவு 12 மணி வரை அமுலில் இருக்கும் இந்த வீதித்தடையை மதித்து ஒத்துழைக்குமாறு அவர் கேட்டுள்ளார்.

வீதித்தடைகள் அமையும் இடங்கள் வருமாறு:

★ அரசடிச் சந்திக்கும் 2 ஆம் கட்டைத் தூணுக்கும் இடைப்பட்ட பருத்தித்துறை வீதி.

★ பிராமணக்கட்டுக் குளச் சந்தியிலிருந்து சங்கிலியன் வீதிச் சந்திக்கு இடைப்பட்ட கோயில் வீதி.

★ செட்டித்தெரு ஒழுங்கையில் இருந்து செட்டித்தெருவின் வடபாகம்.

இந்த வீதித்தடை காரணமாக பஸ்கள், மினி பஸ்கள் மற்றும் சுமை கூடிய வாகனங்கள் ஆனைப்பந்திச் சந்தியில் இருந்து நாவலர் வீதி வழியாக நல்லூர் குறுக்கு வீதி ஊடாகவும் கச்சேரி — நல்லூர் வீதிச் சந்தி வழியாகவும் முத்திரைச்சந்தைச் சந்தி ஊடாகச் செல்ல வேண்டும் எனக் கேட்கப்பட்டுள்ளது. (இ-3)

### புலிகளின்...

(முதலாம் பக்கத் தொடர்)

ஆயித்தியமலை வீதியால் முன்னேறிச் சென்றனர்

வவுணதீவில் இருந்துமூன்று மைல் தூரத்தில் ஆயித்தியமலை சந்தியில் 3 ஆம் கட்டைப் பகுதியில் நிலைகொண்டிருந்த புலிகள் முன்னேறிய படையினர் மீது தாக்குதல் தொடுத்தனர் என்றும்—

அங்கு பெரும் எண்ணிக்கையான புலிகள் தமதுமுன்னணி நிலைகளில் தயார் நிலையில் நின்றனர் என்றும்—

அதன் காரணமாக படையினர் தமது முயற்சியைக் கைவிட்டு இரவு 12 மணியளவில் முகாம் திரும்பினர் என்றும் — பாதுகாப்புப் படைத் தரப்பினர் தெரிவித்தனர் என்று செய்தி ஏஜென்ஸிகள் தகவல் வெளியிட்டன.

நகரில் உள்ள 3ஆம் படைப் பிரிக்கேட், புலனாய்வுப்பிரிவு ஆகியவற்றின் அலுவலகங்களில் இருந்து படைநகர்வு இடம்பெற்ற பகுதிகளை நோக்கி அகோரஷெல் தாக்குதல் இடம்பெற்றது என்றும்—

இதன் காரணமாக அந்த முகாமுக்கு அருகில் உள்ள வீடுகளின் கண்ணாடிகள் நொருங்கின என்றும்—கூறப்பட்டது.

இந்தப்படைநகர்வில் படையினருடன் தேசிய துணைப் படை மற்றும் புளொட் அமைப்பு ஆகியவற்றின் உறுப்பினர்களும் பங்கு பற்றினர்.

படுவான்கரைமக்கள்நேற்று நகருக்கு வர அனுமதிக்கப் படவில்லை. (இ-3-7)


முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



திருமதி பராசக்தி கதிர்காமநாதன்

(கரம்பொன் மேற்கு)

திதி: 16-08-1999

அன்பினால் எம்மை அரவணைத்து
பண்பினால் பாசம் தந்து
கண்ணெனக் காத்த எந்தாய்
நண்ணினார்க் கெல்லாம் நலஞ்செய
எண்ணியே உழைக்கும் நெஞ்சினாய்
சண்முகப் பெருமான்பாதம் சடுதியாய்
சென்னியில் சூட்டச் சென்றீர்
சாந்தியே கொள்வீர் என்றும்.

கணவன், பிள்ளைகள், மருமக்கள்
சகோதர — சகோதரிகள்
பேரமக்கள்.
குடும்பத்தினர்,

73, கிறீன் வீதி,
திருகோணமலை.
(சி/8529)


### 3 மாணவரை...

[முதலாம் பக்கத் தொடர்]

கோட்டையில் உள்ள தமது நண்பர்களுடன் கோயிலுக்கு சென்று வருவதாகத் தெரிவித்து வீட்டில் இருந்து புறப்பட்டார் என்றும்—

அதன்பின்னர் அவரது நண்பர்கள் இருவரையும், இவரையும் காணவில்லை என்றும் — முறைப்பாட்டில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

இந்தமாணவர்கள் குறித்து அந்தப்பிரதேச படை அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டதாகவும்—

இவர்களைத் தாம் கைது செய்யவில்லை எனபடை அதிகாரிகள் தெரிவித்ததாகவும்— மனித உரிமைகள் ஆணைக்குழு யாழ். இணைப்பதிகாரி எஸ்.சிறீதரன் தெரிவித்தார். (இ-3-9)

### வேலிகளை...

[முதலாம் பக்கத் தொடர்]

தாக அவற்றை இடித்துக் கட்டுமாறும் படையினர் கேட்டுள்ளனர்.

வாகன அணி செல்லும் பாதைகளில் அநாவசியமாக எவரும் நிற்கக்கூடாது என்றும் படையினர் பொதுமக்களை அறிவுறுத்தியுள்ளனர். (இ-3)

## உதை பந்தாட்டம்

குருநகர் பாடும்மீன் விளையாட்டுக் கழகம் நடத்தும் ''தூய ஒளி'' வெற்றிக்கிண்ணத்துக்கான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இன்றும், நாளையும் இடம் பெறவுள்ள ஆட்டங்களில் பங்குபற்றும் அணிகளின் விவரம் வருமாறு:

இன்று

★ பி.ப. 3.30 — சென் மேரிஸ் வி.க. எதிர் யுத்கா மல் வி.க.

★ பி.ப. 4.45 — சென் மைக்கல் வி.க. எதிர் பாரதி வி.க.

நாளை

★ பி.ப. 3.30 — சென் றோக்ஸ் வி.க. எதிர் கிறீன் கிங்ஸ் வி.க.

★ பி.ப. 4.45 — சென் நீக்கலஸ் வி. க. எதிர் அரியாலை வி.க 'ஏ' அணி.

## நல்லூரில்

நல்லூர் கந்தன் ஆலய உற்சவத்தையொட்டி இளங் கலைஞர் மன்றத்தின் ஏற்பாட்டில் நல்லூர் துர்க்கா தேவி மணிமண்டபத்தில் இன்று முதல் அடுத்தமாதம் 11 ஆம் திகதிவரை தினமும் மாலை 5.30 மணிமுதல் மாலை 7 மணிவரை தெய்வீக இசை அரங்கு நடைபெறவுள்ளது.

சிவத்தமிழ்ச்செல்வி கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டியின் ஆசியுரையுடன் இன்று ஆரம்பமாகும் இசை அரங்கில் கே. ஆர். சுந்தரமூர்த்தியின் நாதஸ்வரஇசை இடம்பெறும். அவருடன் எஸ். தேவதாஸ் உடன் வாசிப்பார். எஸ். சொர்ணலிங்கம், எஸ். ராமதாஸ் ஆகியோர் தவில் வாசிப்பர். (இ-3-க)

### சனி, ஞாயிறு--

[முதலாம் பக்கத் தொடர்]

மாட்டாது என வன்னிப் படைத் தலைமையகம் அறிவித்துள்ளது.

இந்த நடைமுறை நாளை செவ்வாய்க்கிழமை முதல் அமுலுக்கு வரவிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை நாளை மறுதினம் புதன்கிழமை தொடக்கம் வாரத்தில் திங்கள், புதன், வெள்ளி ஆகிய நாள்களில் ஒவ்வொரு நாளும் 30 உணவு லொறிகள் வன்னிக்குச் செல்ல அனுமதிக்கப் பட்டுள்ளதாக வவுனியா அரச அதிபர் தெரிவித்துள்ளார்.

இதற்கிடையில் வன்னிப் பகுதியிலிருந்து இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் வருபவர்களின் எண்ணிக்கை மட்டுபபடுத்தப்படும் என படைத்தரப்பு அறிவித்துள்ளதாக மற்றோர் தகவல் தெரிவித்தது. (இ-7-8)

### மலயகத்தில்...

[முதலாம் பக்கத் தொடர்[

இதற்கிடையில் கண்டி நகரப் பகுதியில் நாளை செவ்வாய்க்கிழமை நடைபெறவுள்ள எசல பெரஹராவை முன்னிட்டு ஜனாதிபதி திருமதி சந்திரிகா குமாரதுங்கவின் விசேட பணிப்பின் பேரில் தலதா மாளிகையினதும் அதனை அண்டிய பகுதிகளினதும் பாதுகாப்பு நடவடிக்கைகள் திடீரெனப் பலப்படுத்தப்பட்டுள்ளன. நடமாடும் பொலீஸாரும் தமது ரோந்து நடவடிக்கைகளை அதிகரித்துள்ளனர்.

அதேநேரம் — கண்டி அம்பிட்டிய என்னும் இடத்தில் ஜோதிடம் பார்க்கும் தமிழர் ஒருவரின் வீடு நேற்றுக் காலை சுற்றிவளைக்கப்பட்டது என்றும் —

அந்த வீட்டில் இருந்து 5 கிலோ வெடிகுண்டு மற்றும் வயர்கள் கைப்பற்றப் பட்டன என்றும் — பொலீஸார் தெரிவித்தனர்.

இந்த வீட்டில் இருந்த நால்வர் பொலீஸாரால் கைது செய்யப்பட்டனர்.

அந்தப் பகுதிக் கிராம சேவையாளரான பெண் ஒருவரும் கைது செய்யப்பட்டுள்ளார். (இ-3-7-8)

## பட்மின்ரன் போட்டி

யாழ்ப்பாணம், ஓக. 16

யாழ். மத்திய கல்லூரி உள்ளரங்க விளையாட்டு கழகம் மக்கள்வங்கியின் அநுசரணையுடன் டாக்டர் நெல்ஸ் ஞாபகார்த்தமாக நடத்திவரும் உள்ளரங்க விளையாட்டுப் போட்டிகளில் பட்டமின்ரன் ஆட்டம் இன்று மாலை 3.00 மணிக்கு சுண்டுக்குழி மகளிர் கல்லூரி மண்டபத்தில் நடைபெறும். (இ-3)

### யுத்தத்தை...

(முதலாம் பக்கத் தொடர்)

நேர்மையான உள்ளத்தோடு நோக்குகின்றோமா? இந்த மத விழுமியங்கள் வன்முறைகளுக்குத் துணை நிற்பவையாகவோ அல்லது போர் தான். சமாதானத்துக்கான பாதை என்பதைச் சுட்டி நிற்பவையாகவோ இல்லை. ஆபினும் எங்களில் சிலர் இன்னும் சமாதானத்துக்கான ஒரே பர்தை போரே எனவும், அதுவே முதன்மையானது எனவும் கோஷம் எழுப்புகின்றனர்.

மதநம்பிக்கைகள் எவ்வாறிருந்த போதும் எதிரியை நிர்மூலமாக்குவது தான் சமாதானத்துக்கான பாதை என்று கூறமுடியுமா? அப்படியிருந்தும் இன்னும் எம்மில் சிலர் சமாதானத்துக்கான பாதை போரே என்று கருத்துக்குத் துணை நிற்பதுடன் தொடர்ந்தும் ஆதரவளிக்கின்றார்கள்.

போர், சமாதானம் ஆகிய சொற்கள் தமக்குள்ளே முரண்பட்டவையாகவே இருக்கின்றன. எங்கேயாவது போர் இருக்குமானால் அங்கே அமைதி இல்லை. அவ்வாறே அமைதி உள்ள இடத்தில் போருக்கான அவசியமும் இல்லை.

நான் இங்கே நின்று மறை உரையாற்றிக் கொண்டிருக்கின்ற இந்த நேரத்தில் இந்த நாட்டின் சிங்கள தமிழ் இளைஞர்களிடையே போர் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. மாசற்ற இரத்தம் சிந்தப்பட்டுக் கொண்டிருக்கின்றது. உயிரிழப்புக்கள் இடம்பெற்றுக் கொண்டிருக்கின்றன.

அநேகமான பொதுமக்கள் இடம்பெயர்ந்து கொண்டிருக்கின்றார்கள். அவர்களில் சிலர் கடந்த 20வருடங்களாக இடத்துக்கு இடம் ஓடிக் கொண்டிருக்கின்றார்கள். இந்த வன்முறைச் சுழற்சியில் இருந்து நாம் ஏன் விடுபட முடியாதவர்களாக இருக்கின்றோம்?.

போரைத்தவிர வேறு வழி இல்லை என்ற உண்மையற்ற கதைக்கு இதயத்தாலும் மனதாலும் அடிமைப்பட்டவர்களாக ஏன் நாங்கள் தொடர்ந்தும் சென்றுகொண்டிருக்கின்றோம்?

சமாதானத்தை ஏற்படுத்துவது தொடர்பாகப் பல்வேறு தவறான அபிப்பிராயங்கள் எம்மத்தியில் நிலவுகின்றன. அவற்றில் ஒன்றுதான் இலங்கை ஒரு இனத்துக்கு அல்லது ஒரு மதத்துக்குச் சொந்தமானது என்பது.

இலங்கை சிங்களவர்களுக்கோ, தமிழர்களுக்கோ, முஸ்லீம்களுக்கோ சொந்தமானது அல்ல.

பௌத்தர்களுக்கோ, இந்துக்களுக்கோ, கிறிஸ்தவர்களுக்கோ சொந்தமானது அல்ல.

இந்த எல்லா மக்களும் இலங்கைக்குச் சொந்தமானவர்கள். அவர்கள் இலங்கையை வைத்திருக்கவில்லை. ஆனால் இலங்கை மாதா அவர்கள் எல்லோரையும் வைத்திருக்கின்றாள்.

எந்த இனமும் மதமும் இலங்கைக்கு உரிமை கோர முடியாது. எல்லோரும் ஒன்றிணைந்து சமாதான பூமி ஒன்று மலர ஒத்துழைப்போம்.

இப்படி ஆயர் தெரிவித்தார். (இ-7-164)

இப் பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 16-08-99 இல் அச்சிட்டுவெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org